for young
friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

இளைஞர் மாத இதழ்



# நட்சத்திரமாய் ஜொலித்திட வா!

Vol 28-Issue 07 - July - 2025

Private circulation only

# பொன் குத்துவிளக்கு

## The Golden Lampstand

Rev. Selvinraj G

துதிக்கலாம் வாங்க - ஆசரிப்புக் கூடாரம்

கிறிஸ்துவுக்குள் அன்பான இளம் துளிர்களே, இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்! இந்த மாதம் பொன் குத்துவிளக்கு (Golden Lampstand) பற்றி தெரிந்துக் கொண்டு ஆண்டவரை மகிமைப்படுத்தி ஆராதிப்போம் வாருங்கள்! பயன்பாடு: ஒரு தனிப்பட்ட சாட்சியுள்ள வாழ்க்கையையும், ஸ்தல சபையின் சாட்சியுள்ள வாழ்க்கையையுமே இந்த குத்து விளக்கு பிரகடனப்படுத்துகிறது. இந்த குத்துவிளக்கு எப்போதும் எரிந்து கொண்டேயிருப்பதை ஆசாரியன் உறுதி செய்வது போல, நம்முடைய பொதுப்படையான சாட்சியுள்ள வாழ்க்கையும் எப்போதும் பிரகாசமாய் இருந்திட வேண்டும்.

✦ **குத்துவிளக்கிலிருந்து வரும் ஒளி தேவனைக் குறிக்கிறது** (The Light from the Lamp Represents God):

இது ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்தமான இடத்தில் வைக்கப்பட்டு, ஆசாரியர்கள் தங்கள் பணியைச் செய்ய வெளிச்சத்தை அளித்தது. குத்துவிளக்கிலிருந்து வந்த ஒளி சமுகத்தப்ப மேஜை மீது மட்டுமல்ல, தூபபீடத்தின் மீதும் வீசியது. அதுதான் நாம் தேவனிடத்தில் மன்றாட்டு ஏறெடுக்கும் இடம். மேலும் அது பரிசுத்த ஸ்தலம் முழுவதும் ஒளி கொடுத்து, பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையே உள்ள திரையிலிருந்த கேருபீன் சித்திரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இந்த கேருபீன் தேவனுடைய பரிசுத்தத்தைக் காத்து வந்தது. வேதாகமம் கிறிஸ்துவைக் குறித்து என்ன கூறுகிறது என்பதற்கு இது சாட்சி. “தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை” (1 யோவான் 1:5-7). கர்த்தருடைய வார்த்தையாகிய வேத வசனம் தரும் ஒளியே உண்மையான ஒளி. அதுவே நமக்கு பாதுகாப்பான வழிகாட்டி.

இயேசு தம்மை “உலகத்தின் ஒளி” என்று கூறியதைக் கவனியுங்கள். இயேசு சொன்னார் இன்னும் கொஞ்சக் காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும். இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் அந்த ஒளியிலே நடவுங்கள் என்றார். ஏனென்றால் இருளில் நடக்கிறவன் தான் போகுமிடம் இன்னதென்று அறியான் (யோவான் 12:35-36). ஆனால் அவரை விசுவாசித்து ஏற்றுக் கொள்பவர்கள் ஆவிக்குரிய ஒளியில் நடக்கிறார்கள். கிறிஸ்துவே புதிய வானத்துக்கும், புதிய பூமிக்கும் நித்திய ஒளியாயிருக்கிறார். இப்போது நமக்கு ஆசரிப்புக் கூடாரம் இல்லை. ஆனால் நாம் உண்மையான பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்ல முடியும். எப்படியென்றால் கிறிஸ்துவே இந்த உலகில் ஒளியாயிருப்பதால் அவர் காட்டும் ஒளியில் நாமும் நடந்து பரிசுத்த ஸ்தலத்திற்கு செல்ல முடியும்.

✦ **ஆசரிபபுக் கூடாரத்தின் குத்துவிளக்கு பரிசுத்த ஆவியைக் குறிக்கும்** (The Lampstand of the tabernacle represents the Holy Sprit):

குத்துவிளக்கு பசும் பொன்னினால் உண்டாக்கப்பட்டிருந்தது. அதின் தண்டும், கிளைகளும், மொக்குகளும், பழங்களும், பூக்களும் பொன்னால் செய்யப்பட்டிருந்தது (யாத். 25:31). இதில் ஏழு கிளைகள் இருந்தன. இதின் மேல் பகுதியில் கிண்ணம் போன்ற அமைப்பு இருந்தது. இதில் தான் எண்ணெய் ஊற்றப்பட்டு, அதின் ஏழு கிளைகளிலும் திரிகள் போடப்பட்டு எப்போதும் எரிந்து கொண்டேயிருக்கும். இவை பரிசுத்த ஆவியின் ஏழு கிரியைகளைக் காட்டின. இயேசு இவ்வுலகில் இருந்தபோது ஏழு ஆவியினால் நிரப்பப்பட்டு இருந்தார் என்பதை ஏசாயா 11:1, 2இல் பார்க்கலாம். அவை என்னவென்றால் ஞானம் என்ற ஆவி, உணர்வு என்ற ஆவி, ஆலோசனை என்ற ஆவி, பெலன் என்ற ஆவி, அறிவு என்ற ஆவி, கர்த்தருக்கு பயப்படும் பயம் என்ற ஆவி, கர்த்தருடைய ஆவி ஆகியவைகள். குத்துவிளக்கிலிருந்த இந்த ஏழு கிளைகளும் ஆவியின் அடையாளமாக இருக்கிறது. நாமும் இந்த ஆவியின் நிறைவைப் பெறும்போது தான், அவருடைய ஒளியின் பிள்ளைகளாக இருந்து, இயேசுவை மகிமையோடு ஆராதிக்க முடியும்.

(வெளி. 1:4, 5) தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துக் கொண்டிருந்தன. அவை தேவனுடைய ஒளியை இருண்ட இடத்தில் பிரகாசிக்க செய்யும். அது தேவனுடைய ஏழு ஆவிக்குரிய அனுபவத்தைக் குறிக்கிறது. (ரோமர் 8:9) பரிசுத்த ஆவியை “தேவனுடைய ஆவி” என்றும் “கிறிஸ்துவின் ஆவி” என்றும் கூறுகின்றார். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நாம் மாம்சத்திற்கு உட்பட்டவர்களாயிராமல், ஆவிக்கு உட்பட்டவர்களாயிருப்போம். கிறிஸ்துவின் ஆவி நம்மில் இல்லை என்றால், நாம் அவருடையவர்களல்ல.

✦ **பொன் குத்துவிளக்கு இயேசுவின் தெய்வீகத்தைக் காட்டுகிறது** (The Golden Lampstand show the Divinity of Jesus):

பழைய உடன்படிக்கையிலே ஒரே ஒரு குத்துவிளக்கும், அதில் ஏழு கிளைகளும் இருந்தன. இது இஸ்ரவேலர் பல கிளைகளைக் கொண்ட ஒரே ஸ்தாபனமாக இருந்தனர் என்பதைக் குறிக்கிறது. ஆனால் புது உடன்படிக்கையிலே ஒவ்வொரு சபையும் தனித்தனியே குத்துவிளக்காக காட்டப்படுகிறது. இந்த குத்துவிளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்தவராய் கர்த்தர் உலாவி வருகிறதாக நாம் பார்க்கின்றோம். இது இயேசுவின் தெய்வீகத்தைக் காட்டுகிறது (வெளி 3:20).



புது உடன்படிக்கையில் ஒவ்வொரு சபைக்கும் கிறிஸ்துவே நேரடியான தலைவராக இருந்து நம்மை நடத்துகின்றார். நாமும் ஒவ்வொரு குத்துவிளக்கைப் போல பிரகாசமாக எரிந்திட வேண்டும். சபையில் ஏதோ ஒரு அங்கத்தினர் பாவம் செய்யும்போது (வெளிச்சம் இருளாகும்போது) மங்கி எரிகிற திரியைச் சரி செய்வதுபோல, சரிசெய்துவிட வேண்டும். இல்லையென்றால் அப்படிப்பட்டவர்களின் சாட்சி சபையிலே கனவீனபடும். இருள் நம்மில் வந்து, தெய்வீக தன்மையை இழந்துவிடாதபடி, ஆசரிப்பு கூடாரத்தில் விளக்கு எப்போதும் எரிந்துக் கொண்டேயிருப்பது போல, நம்முடைய சாட்சியும் எப்போதும் பிரகாசித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதுதான் ஆண்டவரின் விருப்பம். இதை நிறைவேற்றி ஆண்டவரைத் துதிக்கலாம் வாருங்கள்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம்
வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266


**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| இளசுகள் நாலும், இலை சாப்பாடும் | - 5 & 22 |
| ஏன் பாவம் ரொம்ப மோசம் | - 8 |
| நைல் நதியின் பரிசு - எகிப்து | - 10 |
| தசைச் சிதைவு நோய் | - 12 |
| உதவித்தொகை மோசடி | - 14 |
| சச்சரவு மற்றும் மோதலைத் தீர்ப்பதற்கான வேதாகம உத்திகள் | - 18 |
| செம்மறியாடு & வெள்ளாடு | - 20 |


# நட்சத்திரமாய் ஜொலித்திட வா!

என் அன்பு இளம் உள்ளங்களுக்கு, கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

நாம் வாழும் இந்த உலகம் நம்மை ஆண்டவருக்கென சாட்சியாய் வாழவிடாமல், ஆண்டவரை விட்டு விலகிப் போகிறதற்குரிய ஏராளமான சந்தர்ப்பங்களை நமக்குத் தருகிறது. அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவப்பட்ட கிறிஸ்துவின் பிள்ளைகள் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கிறிஸ்துவுக்கென சாட்சியாய் வாழ்வார்கள்.

தானியேலின் வாழ்க்கையை அறிந்திருக்கிறோம். அவன் பிறந்த தேசம் வேறு, அவன் அடிமையாய் சென்ற தேசம் முழுவதும் மாறுபட்ட தேசம். தானியேலைக் கண்காணிக்க யாரும் இல்லாத இடத்தில், தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் உண்மையாய் இருந்தான். தினந்தோறும் தன்னுடைய நடவடிக்கையில் கட்டுப்பாடுடன் ( Self Discipline ) நடந்து கொண்டான். பாபிலோன் தேசம் பாவம், அசுத்தம், விபச்சாரம் நிறைந்த நாடு. என் தேவன் என்னை காண்கிறார் என்ற எண்ணத்தோடு தன்னுடைய பொறுப்பில் உண்மையைக் காத்துக் கொண்டான். அந்த தேசமே எதிர்த்து நின்றாலும், சட்டங்கள் சாதகமாக இல்லாத நிலையிலும் ஆண்டவருக்கென சாட்சியாய் வாழ்ந்தான். மடிந்து விடுவான், அழிந்து விடுவான் என்று நினைத்தவர்கள் நடுவில் ஆண்டவருக்கென சாட்சியாய் பிரகாசித்தான். அந்த பிரகாசத்தில் தேசத்தின் ராஜாவும், அதிபதிகளும் ஏன் மக்களும் கூட உண்மையான கடவுளை அறிந்து கொண்டார்கள். கடவுளுடைய நாமம் மகிமை அடைந்தது.

அன்பான வாலிபர்களே, கிறிஸ்து உங்களை அவருக்கென பிரகாசிக்க அழைக்கிறார். உன் வாழ்வு பிரகாசிக்க வேண்டுமானால் உன்னிடத்தில் சுயக்கட்டுப்பாடு வேண்டும். மேலும் தினந்தோறும் தேவ சமூகத்தில் அமர்ந்து, கர்த்தருடைய வார்த்தையை வாசிக்கவும், தியானிக்கவும் வேண்டும். அதோடு கூட தேவ வார்த்தையின் படி நடக்கவும், செயல்படவும் வேண்டும். அப்படி செய்தால் கிறிஸ்து உன்னை பிரகாசிக்கப் பண்ணுவார். இருள் நிறைந்த இந்த உலகில் நீ ஒரு சிறப்பு வாய்ந்த நட்சத்திரமாய் ஜொலிப்பாய்.

**ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். (தானியேல் 12:3)**

உங்கள் பகுதியிலுள்ள ஆலயங்களில், வேலை ஸ்தலங்களில், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் வாலிபர்கள் எழும்பி பிரகாசித்திட கர்த்தர் தாமே உங்களைப் பயன்படுத்துவாராக. ஆமென்!

கிறிஸ்துவின் பணியில்,
ஜெ. டேனியல் அருள்மணி

# கோட் ஊழியம்

Rev. Daniel Gnanapragasam

TORAH MISSION

1st WEEK MESSAGE

தலைப்பை வாசித்து செய்தியை எடை போட்டு விடாதீர்கள். ஐந்து ஆகமத்தில் எப்படி ஆபிரகாமுக்கு 4 பலிபீடமோ, ஈசாக்குக்கு 4 கிணறோ, யாக்கோபுக்கு 4 தூண்களோ அதேபோல யோசேப்புக்கு 4 கோட். அதுதான் அங்கி, நாம் இங்கே கோட் என்றே சொல்லலாம். ஆதியாகமம் 50 அதிகாரங்களில் சுமார் 13 அதிகாரங்கள் யோசேப்பைப் பற்றியது. அதாவது 25% ஆதியாகமத்தில் இடம் பிடித்துள்ளது. இந்த வாரம் தோரா ஊழியத்தில் யோசேப்பு 4 கோட் அணிந்திருந்த நிலையில் எப்படி கிறிஸ்துவின் சாயலாக வாழ்ந்தான் என்பதுதான் செய்தி.

இன்றும் நம் கிறிஸ்தவ இல்லங்களில் இளைஞர் சமுதாயம், முதல் 25 வருடங்கள் தகப்பன் வீட்டில் செல்லமாகவோ அல்லது கஷ்டம் தெரியாமலோ வாழ்ந்துவிட்டு பின் புதிய வேலை, திருமண வாழ்வு, இல்லற வாழ்வு என புதிய பரிணாமத்திற்குள் போகும்போது அநேகர் தடுமாறுகிறதும், நிதானம் இழக்கிறதும், சாட்சி கெட்டுப்போகிறதும், பிரிவினை, விரிசல், ஊழியத்தில் ஆர்வமின்மை, திருச்சபையின் காரியங்களைத் தவிர்த்தல், ஆவிக்குரிய வீழ்ச்சி என சில நிலைகளோ அல்லது அனைத்து நிலைகளோ அடைந்துவிடுகின்றனர். இந்தச் செய்தி சொல்லும் விஷயம் என்னவென்றால், முதலாவது உங்கள் வாழ்க்கையை சீர்தூக்கிப் பாருங்கள். பின்பு உங்களைக் கிறிஸ்துவுக்குள் நிலைப்படுத்துங்கள். பின்பு உங்கள் வயது ஒத்தவர்கள் தடுமாறும்போதோ, கஷ்டப்படும்போதோ அவர்களுக்கு உதவிச்செய்து அவர்களைக் கைதூக்கி மீட்டுவிடுங்கள். சுருங்கச் சொன்னால் வெற்றியுள்ள கிறிஸ்தவ இல்லறம் தொடர இளம் தம்பதியினர் மத்தியில் ஊழியம் செய்ய வாய்ப்புகள் நிரம்ப இருக்கிறது. இந்தச் செய்தியின் முடிவில் நீங்கள் முடிவெடுப்பீர்கள் என்ற நிச்சயத்தோடு செய்திக்குள் செல்லுவோம்.

## Coat 1 – பலவருண கோட் (தகப்பனின் அன்பு):

யோசேப்பின் வாழ்வில் அவன் அணிந்திருந்த முதல் கோட். இது தகப்பனின் அன்பை, அதீத அரவணைப்பை வெளிப்படுத்தியது. ஆனால் அதே அங்கிதான் பிறருக்கு வெறுப்பையும், பொறாமையையும், விரோதத்தையும் ஏற்படுத்தியது. அதிகாரம் 37யை வாசித்து பாருங்கள், தேவனுடைய வார்த்தை இப்படியாக பதிவு செய்யப்படுகிறது. “அவனைப் பகைத்தார்கள்” (4), “அவனைக் கொலை செய்யும்படி சதியோசனைப் பண்ணி” (18), “பலவருண அங்கியை கழற்றி” (23), “அந்த அங்கியை இரத்தத்தில் தோய்த்து” (31), “தகப்பனிடத்தில் உம்முடைய குமாரனுடைய அங்கியோ அல்லவோ பாரும்” (32) என்று தொடர்கிறது. ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள் அந்த கோட்டை அணிந்திருந்தபோதும், அதைக் கழட்டும்போதும் யோசேப்பின் அன்பு மாறவில்லை. அவர்களை எதிர்த்தோ, போராடியோ, அழுததாகவோ அல்லது சாபமிட்டதாகவோ எங்கும் பார்க்க முடியவில்லை. இன்னும் இதிலுள்ள கருத்துக்களை உங்கள் ஆவிக்குரிய தியானத்திற்கு விட்டுவிட்டு இரண்டாவது கோட்டுக்குச் செல்லலாம்.

## Coat 2 – அடிமை கோட் (அரண்மனையில்):

இந்தக் கோட் அணிந்திருந்த போது அவன் சந்தித்த சோதனையை நாம் அநேக வாலிப கூட்டங்களில் கேட்டிருக்கக்கூடும். வேதம் சொல்லுகிறது, அந்தக் கோட்டை போத்திபாரின் மனைவியின் கையில் விட்டுவிட்டு தப்பிவிட்டான். உங்களுக்குத் தெரிய வேண்டியது யோசேப்பு வகித்த பதவி அரண்மனை தலைமை. இன்று அது ஒரு MNC நிறுவனத்தின் CEO Position. இதில் அவன் தொடர *Compromise* பண்ணியிருந்திருக்கலாம். அப்பொழுது அவனுக்கு வயது 27. ஆனால் அவன் சொன்ன வார்த்தை “தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி?” தொடர்ந்து நடந்தது உங்களுக்கு தெரியும்.

## Coat 3 – கைதி கோட் (சிறைச்சாலை):

வேதம் சொல்கிறது, “கர்த்தரோ யோசேப்போடு கூடயிருந்து அவன் மேல் கிருபையாய்” என்று குறிப்பிடுகிறது. ஆம் சிறைச்சாலை அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைத்தது. அங்கு அவனுக்கு கிடைத்த இரண்டு சிநேகம் அவர்களும் அவனை மறந்து பின்னொரு நாளில் அந்த வாழ்க்கை முடிவுக்கு வருவதைப் பார்க்கலாம்.

மேலே உள்ள 3 நிலைகளையும் கோர்வையாகப் பார்ப்போமானால், முதல் கோட் பொறாமையை மேற்கொண்டது (*Overcoming Betrayal*), 2வது கோட் பாலியல் சோதனையை மேற்கொண்டது (*Overcoming Temptation*), 3வது கோட் மனசோர்வை மேற்கொண்டது (*Overcoming Disappointment*) என்று மேலே சொன்ன மூன்று நிலைகளையும் மேற்கொள்ளாமல் யோசேப்புக்கு 4வது கோட் கிடைக்கவில்லை.

## Coat 4 – மெல்லிய கோட் (ராஜ பிரபுவின் அங்கி):

பார்வோனின் சொப்பனத்திற்கு விளக்கம் சொன்னதின் விளைவு பார்வோனால் யோசேப்புக்குத் தரிப்பிக்கப்பட்டது. தம்பி தங்காய், இந்த 4 கோட்டும் இயேசு கிறிஸ்து கடந்து வந்த பாதைதான். யோசப்பின் வாழ்விலும், கிறிஸ்துவின் வாழ்விலும் அநேக ஒற்றுமைகள் இருந்தாலும், யோசேப்பு கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக சாட்சியாக வாழ்ந்ததற்கான 4 நிகழ்வுகளை மட்டும் கிறிஸ்துவின் வாழ்வில் பார்ப்போம். இயேசுவின் பிறப்பிலும் (யோவான் 1:14), ஊழிய ஆரம்பத்திலும் (மத். 3:17) பிதாவால் குமாரனுக்குக் கொடுக்கப்பட்ட கனம். ஆனால் இந்த உலகமோ அவரை வெறுத்து, அவருடைய அங்கியை அவருடைய இரத்தத்தில் தோய்த்து பிதாவிடம் காட்டிவிட்டது. 2வது நிலை நமக்காக அடிமையின் ரூபமெடுத்தார். ஆனால் அவர் பாவம் செய்யவில்லை. அவர் வாயில் வஞ்சனையும் இல்லை. 3வது நிலை கல்வாரிக்குச் செல்லும் பொழுது ரோம அரசுகளிடம் ஒரு கைதியைப் போல நடத்தப்படுகிறார். மூன்று நிலைகளையும் தாண்டி உயிர்த்தெழும்பொழுது மகிமையான மென் வஸ்திரத்தோடு உயிர்த்தெழுந்தார்.

பேதுரு சொல்வது போல் கீழ்படிதலையும், மனத்தாழ்மையையும் (5:5) அணிந்து கொள்ளுங்கள். உங்கள் அழைப்பை உறுதி செய்ய மேலே உள்ள முதல் பகுதியை மீண்டும் வாசித்துக் கொள்ளுங்கள். மெல்லிய வஸ்திரம் தரித்திருக்கிற கிறிஸ்துவுக்கு நாம் (திருச்சபை) மணவாட்டியாக கொடுக்கப்படுவோம். பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் அவரிடத்திற்கு வருவார்கள். அதைப் போல் யோசேப்புக்கு மென் வஸ்திரம் தரிப்பிக்கப்பட்ட பின்பு ஆஸ்நாத் மணவாட்டியாக கொடுக்கப்பட்டாள். அதன் பின்பு அவனுடைய சகோதரர்கள் அவனிடம் வந்தார்கள். அல்லேலூயா! ஆமென்!








Mr. Isaac Kamalesh

**(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)**

(சந்தித்த இடம்: ஜனதா உணவகம்)

சாதுரியன்: டேய் இங்க என்ன *Special*

விஷயம்: இங்கேயா எல்லாம் மிக குறைந்த விலையில் கிடைக்கும். அதான் "ஜனதா உணவகம்"ன்னு பெயர் வைத்திருக்காங்க. இது தொழிலாளர் வம்சம் சேர்ந்த வார்த்தை மற்றும் அதன் உரிமையாளரும் இதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். (மற்ற மூவரும்: ஓ!!)

சாதுரியன்: சரி... ஜூன் மாதத்தில் '*May Day*' என்ற வார்த்தை வைரலாகிறது பாத்தியா.

விஷயம்: ஆமாண்டா அதாவது '*May Day*' என்பது '*M' aider* என்ற பிரெஞ்சு வார்த்தையிலிருந்து வந்தது. அகமதாபாத் விமான விபத்தில் விமானி கடைசியாக சொன்ன வார்த்தை '*May Day*'. இது விமான போக்குவரத்தைப் பொறுத்தவரை ஓர் அவசரகால அழைப்பு இதற்கு அர்த்தம் '*Help Me*' (உதவி செய்யுங்கள்) என்று அர்த்தம். (மற்ற மூவரும்: ஓ!!) இந்த வார்த்தை லண்டன் விமான நிலையத்தை சேர்ந்த ரேடியோ ஆபிசர் ஃபிரெட்ரிக் ஸ்டான்லி மாக்ஃபேர்ட் என்பவர் 1927இல் அவசர குறியீடாக அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

சாதுரியன்: சரி ரகசியம்... நீ வீட்ல இந்த வார்த்தை பயன்படுத்தியிருக்கியா ... (எல்லோரும் சிரிப்பு)

விஷயம்: டேய் இந்த வார்த்தை விமானி 3 முறை சொன்னதும் எல்லோருடைய கவனமும் அந்த விமானத்தை நோக்கியிருக்கும். அதாவது மீட்புக் குழு, தீயணைப்புக் குழு, மருத்துவக் குழு என எல்லாரும் தயாராகி விமானத்தை நோக்கி முன்னேற ஆரம்பித்து விடுவார்கள்.

ரகசியம்: இதுல இவ்வளவு அர்த்தம் இருக்கா? நமக்கு இது வரை தெரிஞ்சது எல்லாம் *May Day- Holiday* அவ்வளவுதான்.

விஷயம்: இந்த ஹோட்டல்ல கூட *May Day* அன்று தொழிலாளர்களுக்கு இலவச சாப்பாடு கிடைக்கும். (மற்ற மூவரும்: ஓ!!)

ரகசியம்: இப்படி குறைஞ்ச விலையில இலவசமா சாப்பாடு போட்டா, இங்க வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்கு என்னடா சம்பளம் கொடுப்பாங்க.

சாதுரியன்: டேய் இங்க ஆர்டர் பண்ணிணா வராது. நம்ம தான் வாங்கிட்டு வந்து இந்த ரவுண்டு டேபிளில் உட்கார்ந்து சாப்பிடணும். நல்லா தரமா இருக்கும் பயப்பட வேண்டாம்.

விஷயம்: சம்பளம் என்ற வார்த்தையை கேட்டவுடன் ஒரு கேள்வி ஞாபகம் வருது. டேய் சத்தியன் வேதத்துல 'சம்பளம்'ன்னு எங்கேயாவது வருதான்னு சொல்லேன்.

சத்தியன்: சொல்லுகிறேன் நீங்க எல்லோருமே ஆச்சரியப்படுவீங்க. எபிரெய மொழியில் "தலந்தீன்" என்ற வார்த்தை. இதன் அர்த்தத்தைக் கடைசியிலே சொல்கிறேன். இதை மத்தேயு கிரேக்க பாஷையில் எழுதும்போது கிரேக்கத்தில் அப்படி ஒரு வார்த்தை இல்லை. எனவே அவர் "தலந்தோன்" என்று எழுதினார். பின்வரும் நாட்களில் கிரேக்கத்திலிருந்து ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யும்போது ஆங்கில வார்த்தையில்லாமல் "*Talent*" என்று எழுதிவிட்டார்கள். பின்பு ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்தவர்கள் தமிழில் அதற்கு இணையான வார்த்தை இல்லாமல் "தாலந்து" என்று மொழியாக்கம் செய்தனர். (விஷயம்: ஓகோ, "*Talent*" தான் தமிழ்ல தாலந்துன்னு வந்திருச்சா) இது மட்டுமாடா... நல்லா கவனிச்சா தெரியும். நீ இங்கிலிஷை தமிழா மாத்துறதுக்கு இங்கிலீஷ் *wordல last*ஆ "உ" சேர்த்தா போதும். அதுவே தமிழா மாறிடும். *Example*க்கு - "*School*" *English* வார்த்தை "ஸ்கூலுக்கு போறேன்" இது தமிழ் வார்த்தை. "*Station*" *English* வார்த்தை - ஸ்டேஷன் பக்கம் இது தமிழ் வார்த்தை. மேலே உள்ள *Exmple*லும் அதே மாதிரிதான். (எல்லோரும் சிரிப்பு)

விஷயம்: டேய் ஜோக்ல போயிராத நேரே காரியத்துக்கு வா!

சத்தியன்: இது *Interest*ஆ இருந்திச்சு. அதான் சொன்னேன். சரி காரியத்துக்கு வரேன் "தாலந்தீன்" என்ற எபிரெய வார்த்தைக்கு அர்த்தம் "பணம்". ஒரு தாலந்து என்பது 3000 வெள்ளிக் காசு. இதன் எடை மட்டும் 32 கிலோ.

விஷயம்: டேய் சத்தியம் நாங்க கேட்டது "சம்பளம்" பற்றி பைபிள் என்ன சொல்லுதுன்னு. நீ என்னன்னா பணத்தைப் பத்தி சொல்லுற

சத்தியன்: பொறுமையா இருடா, நான் காரியத்துக்கு வரேன். எபிரெயத்துல "டினாரியஸ்" என்ற வார்த்தை உண்டு. இன்று டினாரியஸ் என்பது "சம்பளம்" என்று பொருள். இயேசுவானவர் வாழ்ந்த காலத்தில் இஸ்ரவேலில் அதிகபட்ச ஒரு நாள் சம்பளம் ஒரு "டினாரியஸ்". ஒரு டினோரியஸ் அரை வெள்ளி காசு. அதாவது அதிகபட்ச ஒருநாள் சம்பளம் என்பது அரை வெள்ளி காசு.

ரகசியம் (குறுக்கிட்டு): இஸ்ரவேல் ஜனங்கள் தேவாலயத்திற்கு ஒரு வருடத்திற்கு கட்ட வேண்டிய வரி ஒரு நாள் ஊதியம். அதான் இயேசுவானவர், பேதுருவிடம் சொன்னதை கவனிச்சியா! ஒரு மீன் தூண்டிலில் சிக்கும், அதன் வாயில் ஒரு வெள்ளி பணம் இருக்கும் அதை எடுத்து உனக்கும், எனக்கும் வரி செலுத்து என்றார். அதாவது ஒரு நாள் சம்பளம் அரை வெள்ளிக்காசு. இருவருக்கும் சேர்த்து "ஒரு வெள்ளி காசு" இதுதான் அர்த்தம்.

மற்ற மூவரும்: எதை தெரிஞ்சு வச்சிருக்கணுமோ அதை மட்டும் நல்லா தெரிஞ்சுவைச்சிருக்க. சூப்பர் டா! (எல்லாரும் சிரிப்பு)

சாதுரியன்: உங்க கோயில்ல வருஷத்துக்கு எத்தனை முறை வரி வசூலிப்பாங்க.

ரகசியம்: அதுவா அசன வரி, பண்டிகை வரி, ஆலய பிரதிஷ்டை வரி...

**- இதன் தொடர்ச்சி 22ஆம் பக்கம்**



# கர்த்தருடைய நாளைக் கவனிக்க அழைக்கும் ஊழியம் - யோவேல்

Rev. Daniel Gnanapragasam



கர்த்தருடைய நாள் என்ற சொல் பொதுவாக வரலாற்றில் நடந்தேறிய அல்லது நடந்தேறக் காத்திருக்கிற கடவுளின் நீதியான செயல்பாடுகளை அடையாளப்படுத்துகிறது. தீர்க்கதரிசனங்களைப் போலவே அவை பல நிலைகளில் நிறைவேறி இருப்பதை வேதாகமத்திலே காண முடியும். உதாரணமாக

*i.* யூதா தேசத்தின் மீதான கர்த்தருடைய நாள் (செப். 1:14-18)
*ii.* இஸ்ரவேல் தேசத்தின் மீதான கர்த்தருடைய நாள் (ஆமோஸ் 5:18-20)
*iii.* எகிப்து தேசத்தின் மீதான கர்த்தருடைய நாள் (எசே. 30:2-19)

கர்த்தருடைய நாள் என்பது கர்த்தருடைய தெய்வீக நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. "யேகோவாவே கடவுள்" என்ற அர்த்தமுடைய பெயரைக் கொண்ட யோவேல் தீர்க்கதரிசி இப்பதத்தை 5 முறை குறிப்பிட்டுள்ளார். இதில்

*i.* ஏற்கனவே நடந்து முடிந்திருந்த வெட்டுக்கிளிகளால் ஏற்பட்ட பஞ்சம், பேரழிவு
*ii.* தீவிரமாக வந்து பரவக் காத்திருக்கிற பலத்த ஒரு ஜாதி
*iii.* யோசபாத் பள்ளத்தாக்கிலே நடைபெற காத்திருக்கிற ஒட்டு மொத்த உலகத்திற்குமான தீர்ப்பு

என்கிற கர்த்தருடைய நாளைப் பற்றிய 3 செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இப்புத்தகத்தை விரிவாக தியானிப்போம்.

## I. கர்த்தருடைய நாளைப் பற்றிய அனுபவம்:

கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது (1:15). இந்த நாளைக் கடந்த கால (1:1-12) மற்றும் நடைபெற காத்திருக்கிற (2:1-11) இரண்டு அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்வோம்.

### a) கடந்த கால அனுபவம் (1:1-12):

வெட்டுக்கிளிகளின் பேரழிவோடு இப்பகுதி தொடங்குகிறது. இப்புத்தகம் எழுதப்பட்ட காலம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. எனினும் இந்த அழிவு நம்மை யூதா தேசத்தை ஆட்சி செய்த இஸ்ரவேல் ராஜா ஆகாபின் குமாரத்தி அத்தாலியாளின் காலத்திற்கு கொண்டு செல்கிறது.

ஏன் இந்த அழிவு:

*i.* பாகாலுக்காக கோயில்கள் கட்டப்பட்டது (2நாளா. 23:17).
*ii.* தீட்டுப்பட்டவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தார்கள் (2நாளா. 23:19)
*iii.* ஆலயப்பணம் பாகாலுக்காக செலவு பண்ணப்பட்டது (யோவேல் 1:9)

அந்நிய தேவர்களாகிய பாகாலுக்காக அத்தாலியாள் காண்பித்த வைராக்கியம் யூதாவில் மிகப்பெரிய சேதத்தை உண்டுபண்ணியது (யோவேல் 1:10-12).

### b) எதிர்கால அனுபவம் (2:1-11):

வெட்டுக்கிளிகளின் படையெடுப்பையொத்த ஒரு அழிவு யூதாவிற்கு தீவிரமாக ஒரு பலத்த ஜாதியாரால் வரக் காத்திருக்கிறது என்ற யோவேல் தீர்க்கதரிசனம், ஆசாரியனாகிய யோய்தாவை திடன் கொள்ள செய்தது (2நாளா. 23:1)

*i.* தேசத்தின் அதிபதிகளையும், ஜனங்களையும் உடன்படிக்கைக்கு உட்படுத்தினான்
*ii.* ஆலயத்திற்குள் கூட்டிச் சேர்த்தான்
*iii.* ஆலயத்திலே தான் ஒளித்து வைத்து வளர்த்து வந்த யூத ராஜா அகசியாவின் மகனாகிய யோவாசை 7 வயதில் ராஜாவாக்கினான். அத்தாலியாளை அழித்துப் போட்டான்

**"Through away the bad experience, but save the lessons" – Frank Sonnerberg**

ஏற்கனவே ஏற்பட்ட அழிவின் அனுபவத்தைச் சுட்டிக்காட்டி வரவிருக்கும் மற்றொரு அனுபவத்தை யோவேல் சுட்டிக் காண்பித்தபோது, யூதாவில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. யோவாசும், யோய்தாவின் நாளெல்லாம் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான் (2 நாளா. 24:2).

## II. கர்த்தருடைய நாளுக்கான ஆயத்தம்:

கர்த்தருடைய நாள் பெரிதும் பயங்கரமுமாயிருக்கும். அதைச் சகிக்கிறவன் யார்? (2:11). இந்த நாளை எதிர் கொள்ள நமக்கு தேவையான ஆயத்தமும் (1:13, 14, 2:12-17), அதனால் புதுப்பிக்கப்பட்ட ஒரு மறுவாழ்வும் (2:19-32) தேவை என்பதை இப்பகுதியில் கற்றுக்கொள்வோம்.

### a) உண்மையான மனந்திரும்புதல்:

பெரிதும் பயங்கரமுமான இந்நாளை தவிர்க்க முழு

இருதயத்தோடு கூடிய உண்மையான மனந்திரும்புதல் அவசியம். அது உபவாசம் என்னும் செயல்முறையை, அழுகை என்னும் உணர்ச்சியோடு வெளிப்படுத்த வேண்டும்.

i. வஸ்திரங்களை அல்ல. இருதயங்களைக் கிழித்து தேவனிடத்தில் திரும்புதல் (2:13)
ii. சபையைப் பரிசுத்தப்படுத்தி உபவாசநாளை நியமித்தல் (2:15)
iii. மண்டபத்துக்கும், பலிபீடத்திற்கும் நடுவே அழுதல் (2:17)

இப்படிப்பட்ட செயலும், உணர்ச்சியும் இல்லாத மனந்திரும்புதல் உண்மையானதல்ல என்று யோவேல் விவரிக்கிறார்.

**b) புதுப்பிக்கப்பட்ட ஆசீர்வாதம்:**

முதல் அதிகாரத்தின் இறுதியில் அழிவு மற்றும் வறட்சியைக் கண்ட தீர்க்கதரிசி இப்போது விசுவாசக் கண்களால் செழிப்புள்ள நிலப்பகுதியை (2:28-32) காண்கிறார். சரீர தேவைக்கான மறுசீரமைப்பு மட்டுமல்ல, ஆவிக்குரிய மறுசீரமைப்பையும் (2:28-32) விவரிக்கிறார்.

i. தன் தேசத்திற்காக வைராக்கியம் கொண்டு தம் ஜனத்தைக் கடாட்சிப்பார் (2:18)
ii. வெட்டுக்கிளிகள் பட்சித்த வருஷங்களின் விளைவைத் திரும்ப அளிப்பார் (2:25)
iii. மாம்சமான யாவர் மேலும் ஆவியை ஊற்றுவார் (2:28)

**"Whatever God restores something He restores it to a place greater than it was before" - Bill Johnson**

தம் ஜனங்களின் உண்மையான மனந்திரும்புதலில் கடவுளின் உண்மைத்தன்மையும், ஆசீர்வாதமும், மகிழ்ச்சியும் வெளிப்படுகிறது. மன்னிப்பு, குணப்படுத்துதல், மீட்பு, திருப்தி மற்றும் புதுப்பித்தல் என்பது இழந்து போன நம் நன்மைகளை நாம் மீட்டெடுப்பதற்கு தேவன் அருளும் அழகான வழிமுறைகளாகும்.

**மன்னிப்பு, குணப்படுத்துதல், மீட்பு, திருப்தி மற்றும் புதுப்பித்தல் என்பது இழந்து போன நம் நன்மைகளை நாம் மீட்டெடுப்பதற்கு தேவன் அருளும் அழகான வழிமுறைகளாகும்.**

## III. கர்த்தருடைய நாளின் அதிகாரம்:

யோசபாத் என்பதற்கு "கர்த்தர் நியாயந்தீர்க்கிறார்" என்று பொருள். எனவே யோசபாத் பள்ளத்தாக்கு என்பது ஒரு இடத்தை குறிப்பிடாமல், கர்த்தரின் நியாயத்தீர்ப்பு நடைபெறும் "தீர்ப்பு பள்ளத்தாக்கு" என்று பொருள்படுகிறது. இங்கு தம் ஜனங்களுக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கு வரும் கடைசி நியாயத்தீர்ப்பும் (3:1-8), தமது ஜனங்களுக்காக கர்த்தர் கொண்டு வரும் நிரந்தர ஆசீர்வாதமும் (3:16-21) வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**a) தம் ஜனங்களுக்கு எதிரானவர்களுக்கு வரும் கடைசி நியாயத்தீர்ப்பு (3:1-8):**

இஸ்ரவேல் என் குமாரன்; என் சேஷ்டபுத்திரன் (யாத். 4:22), என் சுதந்திரம் (யோவேல் 3:2) என்று கர்த்தர் தம் ஜனமாகிய இஸ்ரவேலை அடையாளப்படுத்துகிறார். அத்தகைய தம் ஜனங்களுக்கு எதிராக செயல்பட்ட எல்லாவித தேசத்தாரையும், அவர்களுடைய எல்லாவித அக்கிரமத்தையும் கர்த்தர் தம்முடைய கடைசி நியாயத்தீர்ப்பு நாளிலே நியாயந்தீர்ப்பார். அவர்கள்

i. இஸ்ரவேல் என்னும் அவர் ஜனத்தை, புற ஜாதிகளுக்குள்ளே சிதறடித்தார்கள் (3:2)
ii. எருசலேம் என்னும் அவருடைய தேசத்தைப் பங்கிட்டுக் கொண்டார்கள் (3:2)
iii. சீயோன் என்னும் அவருடைய வாசஸ்தலத்தைக் கொள்ளையடித்தார்கள் (3:5)

தம்முடைய ஜனங்களுக்கு எதிரான அநீதிகள் அவர்களுக்குத் தவிர்க்க இயலாத நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரக் காத்திருக்கிறது. அது கடவுளுடைய பரிசுத்தம் என்னும் வெளிச்சத்தில் வெளிப்படும்.

**b) தம் ஜனங்களுக்காகக் கொண்டுவரும் நிரந்தர ஆசீர்வாதம் (3:16-21):**

இப்பகுதியில் கடவுள் இவ்வுலகத்திற்கான ஒரு மறுசீரமைப்பையும், நீதியின் தரிசனத்தையும் காண்பிக்கிறார். அவருடைய மக்கள் தகுதியிலும், மிகுதியிலும், அமைதியிலும் வாழும் சிலாக்கியத்தைப் பரிசளிக்கும் எதிர்காலத்தை உறுதியளிக்கிறார்.

i. பரிசுத்தம் என்பது கடவுளின் தெய்வீக இயல்பாகும். அவர் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுக்கும் நித்திய வாழ்வில் அத்தகைய பரிசுத்தம் அவருடைய ஜனங்களுக்குள்ளும், அவர் வாசம் பண்ணும் எருசலேமிலும் இருக்கும். இதுவே அவர் கொடுக்கும் பிரதான தகுதியாகும் (3:17)
ii. நிரம்பி வழியும் செழிப்பு மற்றும் தெய்வீக ஆசீர்வாதத்தின் நிறைவு எதிர்காலத்தில் தம் ஜனங்களுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குறுதி தீர்க்கதரிசன பார்வையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது (3:18)
iii. கடவுளின் மக்கள் மீட்டெடுக்கப்படும் சீயோனில் அவருடைய ஆளுகையில் ஏற்படும் நீடித்த அமைதியும், சமாதானமும் அவர்களுக்கு அநீதி இழைத்தவர்களின் தண்டனையுடன் இணைக்கப்பட்டுள்ளது (3:19-21)

அன்பு வாலிப பிள்ளைகளே, பாவத்தின் மிகுதியினால் தவிர்க்க இயலாமல் போன (வெட்டுக்கிளி அழிவு) கர்த்தருடைய நாளையும், மனந்திரும்புதலில் தவிர்க்கப்பட்ட (பலத்த ஜாதியால் வரவிருந்த அழிவு) கர்த்தருடைய நாளையும், ஒட்டுமொத்த உலகமும் சந்திக்க இருக்கும் (யோவாத் பள்ளத்தாக்கு) கர்த்தருடைய நாளையும் நாம் சிந்தித்தோம். கர்த்தருடைய நாளைக் குறித்த அறிவு இப்புத்தகத்தில் தத்ரூபமாக விளக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு முடிவுகளில் ஒன்றை, மூன்றாவது கர்த்தருடைய நாளில் (கடைசி நாளில்) நாம் பலனாக அடையப்போகிறோம். அது தவிர்க்க இயலா நியாயத்தீர்ப்பா? அல்லது தப்பித்துக்கொள்ளும் வழியா? அது சங்காரம் போல சர்வ வல்லவர் இடத்திலிருந்து வருகிறது.

**"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்"**
(2 பேதுரு 1:19).

கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில்

# ஏன் பாவம் ரொம்ப மோசம்?



Mrs. Jeba Saral

Hi Friends, எல்லோரும் நல்லா இருக்கீங்கன்னு நான் கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். இந்த மாதம் “ஏங்க, பாவம் ரொம்ப மோசம்?? சற்று ஆழமாக யோசித்து, இந்த கேள்விக்கு பதிலைப் பார்ப்போம். முதலாவது பாவம் என்பது “தேவனைத் தேடாமல், அவருடைய வார்த்தைக்கு கீழ்படியாதது. பாவம் நம்மிடையே இருக்கும்போது, தேவன் நம்முடன் இருப்பதில்லை. **"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசாயா 59:2).**

பாவம், நாம் செய்யும் வரை நம்மை மயக்க பல வழிகளில் செயல்படும். ஆனால் எப்பொழுது நாம் பாவத்திற்குள் விழுகிறோமோ, அது நம்மை குற்றவாளி கூண்டில் நிறுத்தி விடும். Excuse Me! இது யாருக்கு பொருந்தும் என்றால், நீ தேவனோடு தேவனின் பிள்ளையாக இருக்க வேண்டும் என்று வாழும் போது தான், மற்றபடி அக்கா என்னைப் பொறுத்தவரையில் உலகமும் எனக்கு வேண்டும், தேவனும் எனக்கு வேண்டும்! நான் என்ன பாவம் செய்யாதிருந்தால் பரலோகத்தில் வாழ்வேன் என்பவர்களுக்கு அல்ல. நண்பர்களே! உங்களின் Mind Voice எனக்கு கேக்குது! அக்கா ஓரளவு நான் எல்லா காரியத்திலும் தேவனுக்கு பிரியமாய் நடந்து விடுகிறேன். ஆனால் இந்த ஒரு காரியம் மட்டும் என்னால் செய்யாமலிருக்க முடியவில்லை. நீங்கள் சில நேரங்களில் அட! நம்மால் இதெல்லாம் பண்ணாம இருக்க முடியாது. பேசாம Bibleல ஓரமா வச்சிடலாம் என்று கூட தோனும். இப்பொழுது நன்றாக சிந்தித்து பார்! பாவம் எப்பொழுதும் நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்காது. ஆம் சாத்தான் நிமிஷத்தாசைகளைக் காட்டி, அக்கினி கடலில் தள்ளுவான். மதுபானம், போதை, சினிமா, பெற்றோருக்கு தெரியாத உறவு, Class cut, College cut எல்லாம் செய்யும்போது, பார்க்கும் போது நல்லாதான் இருக்கும். ஆனால் Jollyஆன பாவம் உன்னை ஒருநாள் சமுதாயத்தில் சடுதியில், நீ எதிர்பார்க்காத நேரத்தில் உன்னை காலியாக்கிவிடும். ஆனால் இப்படி Jollyஆன பாவத்தை வெறுத்துத் தள்ளி, கிறிஸ்துவுக்காக துன்பத்தை அனுபவிக்க தெரிந்து கொண்ட ஒருவரை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். ஆமாங்க அவர் தான் மோசே (எபி. 11:24-26). மோசே இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந்து (பரலோகம்), கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தைகளை (கஷ்டம்) பாக்கியமென்று எண்ணினான். இனி **"பாவம் செய்கிறவர்கள் நல்லாதான் இருக்கிறார்கள். ஏனோ பக்தியாய் கிறிஸ்துவுக்காக வாழும் எனக்கு தான் எல்லா கஷ்டங்களும், இழப்புகளும்"** என்று சொல்ல மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

**"பாவத்தின் சம்பளம் மரணம்"** ரோமர் 6:23. அப்படின்னா பாவம் செய்யுறவங்க சீக்கிரமா செத்து போயிடுவாங்களான்னு நான் கேட்டதுண்டு. ஆனால் அது நித்திய மரணமாகிய நரகம் என்று பிற்காலங்களில் நான் கற்றுக் கொண்டேன். அடுத்து பாவம் நம்மேல் உள்ள கிருபையை நாமே போக்கடிக்க வழி வகுக்கிறது. பொய்யான மாயையை பற்றிக் கொள்கிறவர்கள், தங்களுக்கு வரும் கிருபையை அவர்களே போக்கடிக்கிறார்கள் **"பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்" (யோனா 2:8).**

**கடைசியாக பாவம் செய்வதும், செய்யாதிருப்பதும் நம்முடைய Choiceஆக தான் ஆண்டவர் வைத்தார். அதனால wiseஆ choose பண்ணி, ஆண்டவரை nice பண்ணு. அப்படியே சில நேரங்களில் தாவீதைப் போல பாவத்தில் விழுந்தாலும், தயங்காமல் தம் கரத்தால் உன்னை எப்பொழுதும் அணைக்கக் காத்துக் கொண்டிருக்கும் உன் பரம தகப்பனிடம் வந்து விடு! கண்டிப்பாக பாவத்திடம் அல்ல!!**

# ஜம்மு காஷ்மீர்

இந்தியாவின் மிகப்பெரிய சமஸ்தானங்களில் ஒன்றான ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேசமானது கிழக்கே லடாக்கையும், தெற்கே ஹிமாச்சல் மற்றும் பஞ்சாபையும், தென்மேற்கு மற்றும் வடமேற்கில் பாகிஸ்தானையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. 2019ஆம் ஆண்டு வரை சிறப்பு அந்தஸ்துடன் கூடிய தன்னாட்சி மாநிலமாக செயல்பட்டு வந்த இம்மாநிலம் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டுள்ளது.

**மக்கள்:**

ஜம்மு காஷ்மீரில் சுமார் 111 வகைப்பட்ட மக்களினங்கள் வாழ்ந்து வருகின்றனர். 10.9% பழங்குடியினர், 7.6% பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

**சமுதாயத் தீமைகள்:**

பெண் சிசுக்கொலை, வரதட்சணைக் கொடுமை, சிறுவயதில் திருமணம், கொள்ளை, பாலியல் தொழில் அதிகம் காணப்படுகிறது.

**சவால்கள்:**


எல்லை தாண்டிய பயங்கரவாதம், அத்துமீறல் பெரும் சவாலாக உள்ளது. தீவிரவாதம், பலவித குரு இயக்கங்களினால் (ராதாசுவாமி, நிரங்காரி, ரவிதாஸ்) சுவிசேஷம் அறிவிக்கத் தடையாக உள்ளது.

**நமது ஊழியம்:**

1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இப்பகுதியை நமது ஊழியர்களான Rev. டேவிட் தனசிங் மற்றும் Rev. சுதர்சன் தாமஸ் ஆகிய இருவரும் கள ஆய்வு செய்தனர். 1994 மே மாதம் Rev. டேவிட் தனசிங் அவர்கள் குடும்பமாக ஊழியத்தைத் துவங்கினார்கள். பலவித போராட்டங்கள் மத்தியில் தேவன் அவர்கள் ஊழியத்தைக் கனப்படுத்தி ஆத்துமாக்களைத் தர ஆரம்பித்தார். 15.02.2002இல் அக்னூரில் கோட்டே கிராமத்தில் முதல் தேவாலயம் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனின் கிருபையால் தற்போது 9 பணித்தளங்களில் 23 ஊழியர்கள் ஊழியம் செய்து வருகின்றனர்.

**ஆசீர்வாதங்கள்:**

| | |
|---|---|
| சந்திக்கும் மக்களினங்கள் | - 9 |
| சந்திக்கும் மாவட்டங்கள் | - 7 |
| பணி செய்யும் ஊழியர்கள் | - 23 |
| சுதேச ஊழியர்கள் | - 4 குடும்பங்கள் |
| தன்னார்வ ஊழியர் | - 1 குடும்பம் |
| தேவன் தந்துள்ள ஆத்துமாக்கள் | - 12,605 |
| சபைகள் மற்றும் ஆராதனைக் குழுக்கள் | - 128 |
| கட்டப்பட்டுள்ள ஆலயங்கள் | - 5 |
| வேத ஆராய்ச்சிக் குழுக்கள் | - 64 |
| சுவிசேஷக் குழுக்கள் | - 9 |




**ஜெபிக்க:**

- குருக்களையும், அவர்கள் உபதேசங்களையும் நம்பி அவர்களைப் பின்பற்றி செல்லும் மக்கள் மனந்திரும்ப
- சிவசக்தி மற்றும் பீர்பாபாவுக்கு அடிமையாயிருக்கும் இம்மக்கள் அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்று, ஜீவ தேவன் பக்கம் திரும்ப
- நம் ஊழியர்களுக்கு கடும் குளிர் காலங்களில் நல்ல சரீர சுகத்தையும், ஆரோக்கியத்தையும் தேவன் கட்டளையிட
- இம் மாநிலத்தில் நாம் சந்தித்து வரும் மஹாஷா, சாமாயாக், பகத், வால்மிகி, ராம்தானி, ராஜ்புத், குஜ்ஜார், சீக்கியா இன மக்களிலிருந்து திரளான மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள
- புனித இடங்களாக கருதப்படும் அமர்நாத், வைஷ்ணவ், தேவிகட்ரா, நாகசக்தி போன்ற கோவில்களுக்கு சென்று வழிபடும் மக்களின் ஆவிக்குரிய மனக்கண்கள் திறக்கப்பட்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள
- சுவிசேஷம் அறிவிக்கத் தடையாக உள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப
- 6671 கிராமங்களிலும் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் கிடைக்கவும், அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படவும்
- கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கும் மக்கள் சமுதாயத்திற்கு பயந்து வெளிப்படையாக அறிக்கை செய்யத் தயக்கம் காட்டுகின்றனர். பயம் நீங்கி முழு மனதுடன் கிறிஸ்துவை அறிக்கையிட ஜெபிப்போம்.

FIELD - FMPB
Mrs. Vasanthi Emmanuel

# நைல் நதியின் பரிசு
# எகிப்து

எகிப்தின் மிகவும் பொதுவான புனைப்பெயர் "நைல் நதியின் பரிசு". இந்த புனைப்பெயர் நாட்டின் வரலாறு, விவசாயம் மற்றும் நாகரிகத்தில் நைல் நதியின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகிறது. நைல் நதியின் வளமான நிலங்கள் வாழ்க்கையை நிலைநிறுத்தி, உலகின் பழமையான மற்றும் மிகவும் செல்வாக்கு மிக்க சமூகங்களில் ஒன்றை வளர்த்துள்ளன.
எகிப்தியர்கள் தங்கள் நாட்டை கெமெட் என்றும் அழைத்தனர், அதாவது "கருப்பு நிலம்" (கெம் என்றால் "கருப்பு" என்று பொருள்).

**தலைநகரம்:** கெய்ரோ

**புவியியல்:** பவுண்டு (Pound)

**வேதாகம வரலாற்று குறிப்புகள்:**

பைபிளில் எகிப்து ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. இஸ்ரவேலர்கள் எகிப்தில் தங்கியது, அவர்களின் அடிமைத்தனம் மற்றும் மோசேயின் வழிநடத்துதலில் அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறுவது போன்ற குறிப்பிடத்தக்க நிகழ்வுகளையும், யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதை, சாலமோனின் திருமணம், தீர்க்கதரிசி எரேமியா எகிப்துக்கு ஓடிப்போனது போன்ற நிகழ்வுகளுடன் எகிப்து தொடர்புடையதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிலப்பரப்பு:**

எகிப்து பெரும்பாலும் நான்கு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. நைல் பள்ளத்தாக்கு மற்றும் டெல்டா, கிழக்கு பாலைவனம், மேற்கு பாலைவனம் மற்றும் சினாய் தீபகற்பம்.

**எல்லைகள்:**

எகிப்து மேற்கில் லிபியாவுடனும், தெற்கில் சூடானுடனும், வடகிழக்கில் பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுடனும் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது. அகபா வளைகுடா எகிப்தை ஜோர்டான் மற்றும் சவூதி அரேபியாவிலிருந்து பிரிக்கிறது.

**ஜனத்தொகை மற்றும் மதம்:**

2023இன் அறிக்கையின்படி 11.45 கோடி மக்கள் வாழும் இத்தேசத்தில், 90 மில்லியன் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இது மொத்த மக்கள் தொகையில் 90.64% ஆகும். மீதமுள்ள 9.26% கிறிஸ்தவர்களும், 0.1% பிற சிறுபான்மை மத மக்களும் வசிக்கின்றனர்.

**கலை மற்றும் கட்டிடக்கலை:**

கிசாவின் அற்புதமான பிரமிடுகள், கோயில்கள் மற்றும் கல்லறைகள் பண்டைய எகிப்தியர்களின் கலை மற்றும் கட்டிடக்கலை திறமைக்கு சான்றாகும்.

**ஜெபக்குறிப்பு:**

- ✦ எகிப்து பாரம்பரியமாகவே ஒரு ஆணாதிக்க கலாச்சாரமாகும். அங்கு பெண்கள் கொள்கை மற்றும் சமூகத் துறைகளிலும், வீட்டிலும் சமத்துவமின்மையை எதிர்கொள்கின்றனர். இந்நிலை மாறி இருபாலருக்கும் அனைத்துத் துறைகளிலும் சம உரிமைகள் கொடுக்கப்பட ஜெபிப்போம்.
- ✦ ஆண்டுதோறும் நிகழும் நைல் வெள்ளத்தால் ஏற்பட்ட வளமான கருப்பு மண்ணின் நிறத்திலிருந்து கெமெட் என்ற பெயர் பெறப்பட்டது. எனவே கெமெட் என்பது நைல் பள்ளத்தாக்கில் பயிரிடப்பட்ட பகுதியாகும். எகிப்தின் பொருளாதாரம் தென் ஆபிரிக்கா, நைஜீரியா நாடுகளை அடுத்து ஆபிரிக்காவின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக கருதப்படுகிறது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் நைல் பள்ளத்தாக்கில் ஜனத்தொகை அதிகரித்து கொண்டிருப்பதால் அதன் தாக்கம் அங்குள்ள வளங்களை பெரிய அளவில் பாதிக்கிறது. எனவே இங்கு சீரான பொருளாதார சம நிலைக்காக ஜெபிப்போம்.
- ✦ பண்டைய எகிப்தியர்கள் 2,000க்கும் மேற்பட்ட கடவுள்களையும், தெய்வங்களையும் வணங்கினர். இன்றும் பலர் தங்கள் பழைய தெய்வங்களையும், மூட நம்பிக்கைகளையும் விடாமல் அனுபிஸ், பார்வோன்கள், பூனைகள், இருள் போன்றவற்றை கண்டு பயப்படுவது மற்றும் வழிபடுவது போன்ற காரியங்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் கர்த்தரே தெய்வம் என்று அறிக்கை செய்து அவரை ஆராதிக்கவும், அங்குள்ள கிறிஸ்தவர்கள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும், சுவிசேஷம் மீதமுள்ள 90% மக்களுக்குச் சேரவும் ஜெபிப்போம்.
- ✦ வன்முறை குற்றங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும், நெரிசலான பகுதிகளில் பிக்பாக்கெட் திருட்டு போன்ற சிறிய குற்றங்கள், சுற்றுலாப் பகுதிகள் மற்றும் மதத்தலங்கள் உட்பட பல்வேறு இடங்களில் பயங்கரவாதத் தாக்குதல்கள், சுற்றுலா விடுதிகளில் பாலியல் வன்கொடுமைகள், சில குடிசைப் பகுதிகளில் போதைப்பொருள் கடத்தல், திருட்டு மற்றும் சண்டைகள் போன்ற சில குற்றங்கள், ஊழல், மனித கடத்தல் மற்றும் பிற கடத்தலில் ஈடுபாடு, குற்றவியல் சந்தைகளுடன் தொடர்பு போன்ற இருண்ட ஒரு பக்கம் இத்தேசத்திற்கு உண்டு. இக்காரியங்கள் வருங்காலங்களில் இல்லாமல் போகவும், இத்தேசம் அமைதி நிறைந்த ஒரு கிறிஸ்தவ நாடாக மாறவும் ஜெபிப்போம்.



Ms. Beulah Baskar

# REV. செல்வின் ஜேசுதாஸ்



நான் கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சுகிராமத்திற்கு அருகிலுள்ள ரத்தினபுரம் என்ற ஊரில் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவ பக்தி ஒழுக்கத்தில் வளர்க்கப்பட்டவன். எனது பள்ளி நாட்களில் தேவனுக்குப் பயந்து நடந்தாலும், கல்லூரி நாட்களில் தேவனை விட்டு தூரமாகச் சென்றேன். கல்லூரிப் படிப்பை முடித்து ஒரு நாள் மதுரையில் நடந்த தரிசன முகாமில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. அந்த கூட்டத்தில் ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் அவர்கள் தேவனுடைய செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். முதல் நாள் கூட்டத்திலே பரிசுத்தமான வாழ்க்கையைக் குறித்து பேசினார்கள். அப்பொழுது என்னையும் நான் ஒப்புக்கொடுத்து, பரிசுத்தமாக வாழ்வதற்கு தீர்மானித்தேன். அடுத்த நாள் கூட்டத்தில் இந்த உலகத்தில் நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, ஒன்றும் கொண்டு செல்வதுமில்லை. ஒரே ஒரு வாழ்க்கை அதுவும் சீக்கிரம் கடந்து விடும். தேவனுக்காக செய்வது மட்டுமே நிலைத்து நிற்கும் என்றும், இன்னும் நாம் வாழும் பாரத தேசத்திலே எத்தனையோ இலட்சக்கணக்கான கிராமங்கள் இயேசு என்ற செய்தியை ஒரு முறை கூட கேள்விப்படவில்லை, யார் புறப்பட்டு செல்வார்கள் என்று கூப்பிடும் பொழுது, என் உள்ளத்திலே ஒரு போலீஸ் ஆபீஸர் ஆக வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், தேவன் என்னோடு இடைப்பட்டு ஊழியத்திற்கு அர்ப்பணிக்க வழி நடத்தினார்.

1988ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்து பெத்தேல் வேதாகமக் கல்லூரியில் ஒரு ஆண்டு பயிற்சி முடித்து மகாராஷ்டிரா மாநிலம் செல்ல வேண்டும் என்று ஆவலோடு ஜெபித்து வந்தேன். நான் தலைமைச் செயலகத்தில் இருக்கும் பொழுது, ஒரு நாள் சைக்கிள் ஒன்று ஒரிசா மாநிலத்திற்கு அனுப்ப உதவி செய்யும்படி என்னைக் கேட்டனர். நானும் அருட்திரு. சுகுமார் அவர்களுடன் சென்று அந்த சைக்கிளை ஒரிசா மாநிலத்துக்கு அனுப்பி வைத்து விட்டு வந்தேன். எனது பணித்தள நியமனம் மகாராஷ்டிரா இல்லாமல், ஒரிசாவுக்கு கொடுக்கப்பட்டது. சற்று அதிருப்தியோடு சென்ற வேளையில் அருட்திரு. சுகுமார் அவர்கள் என்னிடம் செல்வின், நீங்கள் அனுப்பி வைத்த சைக்கிள் ராய்ரங்பூரில் இருக்கிறது. அதை நீங்கள் எடுத்து ஊழியத்திற்குப் பயன்படுத்துங்கள் என்றார். இந்த சைக்கிளை அனுப்பி வைத்த அன்று நான் ஜெபித்தேன், இந்த சகோதரன் இந்த பிராந்தியத்திற்கு வந்தால் சைக்கிள் எங்கு இருக்குமோ அதே பணித்தளத்தில் அவரைப் பணி நியமனம் செய்யும் என்று. கடவுளின் அநாதி தீர்மானத்தின்படி ஒரிசா மாநிலம் சென்றடையவும், ஒரிசா மொழியைக் கற்றுக் கொள்வதற்கும் தேவன் உதவி செய்தார்.

1991ஆம் ஆண்டு மே மாதம் சார்லெட் ஜெசிந்தா அவருடன் திருமணம் முடிந்து, மீண்டும் பணித்தளம் வந்து குடும்பமாக ஆறு ஆண்டுகள் ஒரிசா மாநிலத்தில் ஊழியத்தை நிறைவேற்றினோம். பின் நாட்களில் தெரிந்தது ஒரிசா மொழி கிராமத்து மக்களுக்கு புரியவில்லை. சந்தாலி மொழி மட்டும் தான் புரியும் என்று மறுபடியும் சந்தாலி மொழியைக் கற்றுக் கொள்வதற்கு தேவன் கிருபை பாராட்டினார். இந்நாட்களில் சந்தாலி மொழியில் ஓல்சிக்கி என்ற புதிய சந்தாலி எழுத்து வடிவத்தை கற்றுக் கொள்ளவும், அதிலே ஆரம்பக் கல்வி நிலை தேர்விலே வெற்றி பெறவும் தேவன் கிருபை பாராட்டினார். இந்நாட்களில் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் ஊழியம் செய்து வந்த ஆஸ்திரேலியா மிஷனெரி கிரஹாம் ஸ்டெயின்ஸ் அவர்கள் குடும்பத்தோடு ஐக்கியம் கொள்ளவும், ஊழியம் செய்யவும் தேவன் கிருபை பாராட்டினார். அதன்பின் பணி மாறுதல் பெற்று அருகில் உள்ள சிங்பும் மாவட்டத்தில் தல்புங்காடு என்ற பணித்தளத்திற்கு சென்றேன். அங்கும் சந்தாலி மக்கள் மத்தியில் தேவப்பணியைச் செய்ய கிருபை பாராட்டினார்.

மீண்டும் அந்த (ஒரிசா பிராந்தியம்) உட்கல் பிராந்தியத்தை ஒருங்கிணைப்பதற்கு தேவன் ஒரு வாய்ப்பு கொடுத்தார். இந்த நாட்களிலே ஊழியத்தோடு அங்குள்ள பிள்ளைகளின் கல்வி தரத்தை உயர்த்தவும் இரண்டாம் தலைமுறை தலைவர்களை உருவாக்கவும், தல்பூங்கால் இந்த இடத்திலே "வாழ்வின் ஒளி" (JION MARSAL) என்ற ஆண்கள் விடுதி ஆரம்பிக்கவும் தேவன் கிருபை பாராட்டினார். ஒரிசா மாநிலத்தின் கிராமப் பகுதியில் பெண் பிள்ளைகளுக்கு படிப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்று உணர்ந்து எனது துணைவியார் அவர்கள் மிகவும் பாரப்பட்டு ஜெபித்து ஜெசிப்பூர் என்ற இடத்திலே "வாழ்வின் ஒளி" (JION MARSAL) என்ற பெண்கள் விடுதி ஒன்றை ஆரம்பிக்க தேவன் கிருபை பாராட்டினார்.

அதன் பின்பு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலம் இந்தியா முழுவதும் உள்ள சிறுவர் பராமரிப்புத்துறையைப் பொறுப்பெடுத்து செய்யவும், சிறுவர் பராமரிப்புத் துறையில் அநேக முன்னேற்றங்களைக் கொண்டு வரவும், எல்லா விடுதிகளையும் பார்வையிட்டு பிள்ளைகளைப் படிக்க வைப்பதன் நோக்கத்தை பிள்ளைகளுக்கும், விடுதி பொறுப்பாளர்கள், பெற்றோர்கள், முழு நேர ஊழியர்களுக்கும் சொல்வதற்கு தேவன் கிருபை பாராட்டினார். 6 ஆண்டுகள் இந்த பணிகளை நிறைவேற்ற தேவன் கிருபை பாராட்டினார். அதன் பின்பு 4 ஆண்டுகள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிலுள்ள சொத்து பராமரிப்பு துறையைப் பொறுப்பெடுத்து செய்யவும், அநேக ஆலயங்கள், விடுதிகள் கட்டுவதற்குரிய ஏற்பாடுகள் செய்வதற்கும் தேவன் கிருபை பாராட்டினார். அநேக ஆண்டுகளாக பட்டா வாங்காமலிருந்த சுமார் 15 நிலங்களுக்கு பட்டா வாங்குவதற்கு தேவன் கிருபை பாராட்டினார்.

4 ஆண்டுகள் முடிந்து மறுபடியும் பணித்தளம் சென்று தொடர்ந்து பணியை செய்ய மிகவும் ஆவலுடன் இருந்தோம். இயக்கத்தின் அறிவுறுத்தலின் பேரில் தற்சமயம் பாண்டிச்சேரியில் முன்னேற்றப்பணிக்கு பொறுப்பாக இருந்து பாண்டிச்சேரி, கடலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம் போன்ற பகுதிகளில் உள்ள தலைவர்களை உற்சாகப்படுத்துவதற்கும், இந்த ஊழியத்தை விரிவாக்கம் செய்வதற்கும் தேவன் உதவி செய்து கொண்டிருக்கிறார்.

**ஜெபிக்க:**

- இந்த பகுதியிலிருந்து அநேக முழுநேர ஊழியர்கள் எழும்பிட, அதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் வெற்றியடைய ஜெபிப்போம்.
- அநேக ஜெபக்குழுக்கள் உருவாக ஜெபிப்போம்.
- அண்ணனுக்காகவும், அவர்களது குடும்பத்திற்காகவும், செய்யும் ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம்.

Rev. T.Y.P. Asir

# தசைச் சிதைவு நோய்

தசைச் சிதைவு நோய் என்பது பெற்றோர்களின் மூலமாக அவர்களுடைய பிள்ளைகளுக்கு மரபணுக்கள் வழியாக வரும் நோயாகும். இது தசைகளிலுள்ள வலிமை படிப்படியாக குறைந்து மோசமடைய வழிவகுக்கிறது. காலப்போக்கில், தசைகள் சுருங்குவதால் அதன் சக்தி உருவாக்கும் திறன் குறைந்துவிடுகிறது. மேலும் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் அன்றாட வாழ்க்கையின் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகிறது.

குறிப்பாக தசை உருவாக்க தேவையான அவசியமான புரதங்களை உருவாக்கும் மரபணுக்களில் ஏற்படும் மாற்றங்களால் இந்த தசைச் சிதைவு நோய் ஏற்படுகிறது. டுச்சென் மஸ்குலர் டிஸ்ட்ரோபி (DUCHENNE MUSCULAR DYSTROPHY), பெக்கர் மஸ்குலர் டிஸ்ட்ரோபி (BECKER MUSCULAR DYSTROPHY), மயோடோனிக் மஸ்குலர் டிஸ்ட்ரோபி (MYOTONIC MUSCULAR DYSTROPHY), லிம்ப்-கார்டில் மஸ்குலர் டிஸ்ட்ரோபி (LIMB-GIRDLE MUSCULAR DYSTROPHY), ஃபேசியோஸ்காபுலோஹுமெரல் மஸ்குலர் டிஸ்ட்ரோபி (FACIOSCAPULOHUMERAL MUSCULAR DYSTROPHY), கான்ஜெனிட்டல் மஸ்குலர் டிஸ்ட்ரோஃபிஸ் (CONGENITAL MUSCULAR DYSTROPHIES) மற்றும் எமரி-ட்ரீஃபஸ் மஸ்குலர் டிஸ்ட்ரோபி (EMERY-DREIFUSS MUSCULAR DYSTROPHY) போன்ற சில வகையான MDக்கள் முகம், தோள்கள், மேல் கைகள், இடுப்பு, எண்டோகிரைன் சுரப்பிகள், இதயம், நுரையீரல் மற்றும் மூளை உள்ளிட்ட பிற உறுப்புகளையும் பாதிக்கலாம்.

தசைச் சிதைவின் சில அறிகுறிகள் இயக்கத்தில் சிரமம் (எடுத்துக்காட்டாக நடைபயிற்சி, ஓட்டம், குதித்தல், படிக்கட்டுகள் ஏறுதல் போன்றவை) அடிக்கடி விழுதல், படுக்கையிலிருந்து அல்லது உட்கார்ந்த நிலையிலிருந்து எழுவது, தசை வலி அல்லது தசை இறுக்கம், வீங்கின பின்னங்கால் (கொழுப்பு படிவுகள் காரணமாக) முகம், தோள்கள், இடுப்பு மற்றும் கைகால்கள் போன்ற குறிப்பிட்ட தசைகள் பலவீனமாகுதல். தசைச் சிதைவு நோய் போன்ற சிக்கல்களுக்கு வழிவகுக்கும் தசை சுருக்கங்கள் (மூட்டுகளைச் சுற்றியுள்ள தசைகள் அல்லது தசைநாண்கள் சுருங்குதல்) ஸ்கோலியோசிஸ் (முதுகெலும்பு பக்கவாட்டு வளைவு) சுவாசக் கோளாறுகள் (பலவீனமான சுவாச தசைகள் காரணமாக) இதய பிரச்சினைகள் (கார்டியோமயோபதி, அரித்மியாஸ்) விழுங்குவதில் சிக்கல்கள் மற்றும் அறிவாற்றல் அல்லது கற்றலில் சிரமங்கள்.

## புள்ளிவிவரங்கள்:

- DUCHENNE MUSCULAR DYSTROPHY (DMD), என்பது மிகவும் பொதுவான மற்றும் கடுமையான வடிவமாகும். இது முக்கியமாக சிறுவர்களைப் பாதிக்கிறது. இந்தியாவில் பிறக்கும் 3,500 முதல் 5,000 ஆண் பிள்ளைகளில் ஒருவர் இந்நோயால் பாதிக்கப்படுகிறார்.
- BECKER MUSCULAR DYSTROPHY (BMD), இதன் பாதிப்பு DMDயை விட குறைவாகவே உள்ளது. இந்தியாவில் பிறக்கும் 18,000 ஆண் பிள்ளைகளில் ஒருவர் இந்நோயால் பாதிக்கப்படுகிறார்.
- MYOTONIC DYSTROPHY (DM1), இதன் பாதிப்பு இந்தியாவில் பிறக்கும் 100,000க்கு 0.5 முதல் 18 வரை இந்நோயால் பாதிக்கப்படுகிறார்.
- FACIOSCAPULOHUMERAL MUSCULAR DYSTROPHY (FSHD), இதன் பாதிப்பு இந்தியாவில் பிள்ளைகளில் சுமார் 2-3% என்ற குறைந்த அளவிலேயே பாதிப்பு ஏற்படுகிறது.



## இந்தியாவிலுள்ள முக்கிய சவால்கள்:

- இந்நோய் குறித்த சரியான விழிப்புணர்வு இல்லை.
- இந்தியாவில் இந்நோய் பரவல் குறித்து போதுமான ஆராய்ச்சி மற்றும் விரிவான தரவு சேகரிப்பு இல்லாததால் இது சரியாக ஆவணப்படுத்தப்படவில்லை. இதனால் பல குழந்தைகள் தங்களுக்கு இந்நோய் இருப்பது தெரிவதற்கு முன்பே இறந்துவிடுகின்றனர்.
- தசைச் சிதைவுக்கான சிகிச்சை மிகவும் விலையுயர்ந்ததாக இருப்பதால் பல நோயாளிகளுக்கு குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு இந்த சிகிச்சை குறித்த விழிப்புணர்வு இல்லாததால் இதற்கு சிகிச்சை எடுக்க முடியாமல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இது ஒரு சவாலாகவே உள்ளது.

## ஜெபிக்க:

- தசைச் சிதைவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவன் நம்பிக்கை, எதிர்காலத்தை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல் மற்றும் தைரியத்தைக் கொடுக்க
- தசைச் சிதைவுக்கு சரியான சிகிச்சை கிடைக்கவும். பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் பெற்றுக்கொள்ளும்படியான விலையிலும் கிடைக்க தேவன் கிருபை செய்ய
- இவர்களின் நுரையீரல் மற்றும் இதயத்தின் ஆரோக்கியமான செயல்பாட்டிற்காகவும், உறுப்புகளின் பாதுகாப்பிற்காகவும்
- தசைச் சிதைவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக புதிய திட்டங்களை அரசு மேற்கொள்ளவும், உதவி சாதனங்களை (சக்கர நாற்காலிகள், பிரேஸ்கள்) பயன்படுத்தும் வகையில் அரசாங்கம் இவர்களுக்கு உதவவும்
- இவர்களை கவனிப்போருக்கு தேவன் பொறுமை மற்றும் சகிப்பு தன்மைகளை கொடுக்கவும், இவர்களுக்கு ஒரு ஆதரவான சமூதாயம் கிடைக்கவும் ஜெபிப்போம்.

# ஜுவாங் மக்கள்

ஆதிமனிதன் ஆதாம் பாவத்திற்குப் பின் இலை தளைகளை உடம்பில் சுற்றிக் கொண்டதை நாம் அறிவோம். ஆனால் ஒரிசா மாநிலத்தில் "இலைகளை அணிவோர்" அல்லது "பட்டுவா" என அழைக்கப்படும் ஒரு கூட்ட மக்கள் வாழ்கிறார்கள் என்று தெரியுமா? அவர்கள் தான் ஜுவாங் மக்கள். ஒரிசாவிலுள்ள 13 பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்களின் பட்டியலில் ஒன்று ஜுவாங் மக்கள். நான்கு ஜுவாங் மக்கள் நிர்வாணமாக நடனமாடிக் கொண்டிருந்தபோது ஒரிசா மாநிலத்தில் உள்ள "கோனசிக்கா" என்ற மலையில் திடீரென தோன்றிய நதி தேவதை இலைகளை உடுத்திக் கொள்ள உத்தரவிட்டதாக இவர்கள் நம்புகிறார்கள்.

**வாழ்விடம்:**

ஒரிசா மாநிலத்தில் உள்ள கியோஞ்சகார் மாவட்டத்திலுள்ள "கோனசிக்கா" என்ற மலைப்பகுதியிலும், அதை ஒட்டிய தென்கானல் பகுதியிலும் வாழும் ஆஸ்ட்ரோ ஆசியாட்டிக் வகையைச் சேர்ந்த மக்களே ஜுவாங் மக்கள். இவர்கள் சுமார் 50,000 பேர் வாழ்கின்றனர். இவர்கள் பேசும் மொழி முண்டா குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்ட்ரோ ஆசியாட்டிக் மொழி வகையைச் சார்ந்தது.

**கல்வியறிவு:**

ஜுவாங் மக்கள் மத்தியில் கல்வி அறிவு வெறும் 11.86% (1992 ஆய்வுப்படி). பெண்கள் மத்தியில் 3.84% மட்டுமே.

**தொழில்:**

அடிப்படையில் ஜுவாங் மக்கள் வேட்டையாடுகிறவர்களாகவும், உணவுப்பொருள் சேகரிப்பவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். அதனால் இவர்கள் உணவு காட்டில் கிடைக்கும் கிழங்குகள், இலைகள், காளான், முட்டை, தேன் மற்றும் காட்டுப்பூச்சிகள் போன்றவைகளே. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வனம் பாதுகாப்பானதாக அறிவிக்கப்பட்டதால் தொழிலையும், உணவையும் இழந்தனர். இதனால் தற்போது விவசாயம், கூடைப் பின்னுதல் போன்ற தொழில்களைச் செய்து வருகின்றனர். தாங்கள் பின்னும் மூங்கில் கூடைகளை உப்பு, எண்ணை போன்ற உணவுப் பொருள்கள் வாங்குவதற்கு பண்டமாற்று பொருளாக உபயோகப்படுத்துகின்றனர். இவர்கள் மாடுகளை உழவுக்காக வளர்த்தாலும், அதிலிருந்து கிடைக்கும் பாலை இவர்கள் குடிப்பதில்லை.

**கலாச்சாரம்:**

ஜுவாங் மக்கள் 6 முதல் 8 அடி உயரம் கொண்ட சிறு குடிசைகளில் வாழ்கின்றனர். வாசல் உயரம் மிகக் குறைவானதாகவே இருக்கும். பொதுவாக வீடுகளில் இரண்டு பகுதி இருக்கும். ஒரு பகுதி தங்குவதற்கும், மற்றொரு பகுதி சாமான்கள் வைக்கும் அறையாகவும் இருக்கும். இவர்கள் காட்டு மிருகங்கள் மற்றும் பறவைகளைப் போல ஒலி எழுப்பியவாரே வேகமாக நடனம் ஆடுவார்கள். சங்கு என்ற இசை கருவி இவர்கள் மத்தியில் பிரபலமானது. அதனால் சங்கு நடனம் மிகவும் பிரபலமானது. பலதார மணம் இவர்கள் மத்தியில் மிக அபூர்வமானது. இறந்தவர்களை எரித்து அந்த சாம்பலை ஓடும் நீரோடைகளில் கலக்கின்றனர்.



**மத நம்பிக்கைகள்:**

ஜுவாங் மக்கள் பொதுவாக ஏராளமான வன ஆவிகளைத் தெய்வமாக வழிபடுகின்றனர். "தரம்தேவதா" என்ற சூரியக் கடவுளையும், "பாசுமாதா" என்ற பூமி கடவுளையும் இவர்கள் வழிபடுகின்றனர். மிருக பலியை சூரிய கடவுளுக்காக கஷ்ட நேரங்களிலும், பூமி கடவுளுக்கு நல்ல விளைச்சலுக்காகவும் செலுத்துகின்றனர். இன்னும் அநேக தேவ தேவதைளை இவர்கள் வணங்குகின்றனர். "கிராமசீர்" "தன்பாட்டி" சீம்பாத்" இவர்களின் தெய்வங்கள்.

**வாலிபர்கள் வாழ்க்கை முறை:**

திருமணம் ஆகாத வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் தங்குமிடத்தை "மண்டகார்" அல்லது "மஞ்சாங்" என அழைக்கின்றனர். இந்த இடம் வாலிபர்கள் தங்கும் இடமாகவும், பெரியவர்கள் கூட்டம் நடத்தும் இடமாகவும், ஊருக்கு வரும் விருந்தாளிகள் தங்கும் இடமாகவும், ஊருக்கு பொதுவான பொருள்கள் வைக்கும் இடமாகவும் இது பயன்படுகிறது. இங்கு சமுதாய பெரியவர்கள், வாலிபர்களுக்கு சமுதாய பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை மற்றும் கட்டுப்பாடுகளைக் குறித்து கற்றுக் கொடுக்கிறார்கள்.

**ஜெபியுங்கள்:**

- அநேக தேவதைகளை வழிபடும் இவர்கள் ஜீவதேவனை அறிந்துக் கொள்ள ஜெபிப்போம்.
- இவர்களுக்குப் போதிய வருமானம் கிடைக்க ஜெபிப்போம்.
- ஜுவாங் மக்கள் கல்வி அறிவு பெற ஜெபிப்போம்.
- ஜுவாங் மக்கள் மத்தியில் ஊழியங்கள் பெருக ஜெபிப்போம்.



Mr. Suriya Kumar

PRAYER POINTS - PEOPLE GROUP

# உதவித்தொகை மோசடி

Ms. Lily Reaiah Grace



சமீபத்தில், தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலியில் 12ஆம் வகுப்பு மாணவியின் பெற்றோருக்கு, தங்கள் மகள் ரூ.28,500 உதவித்தொகை (SCHOLARSHIP) வென்றதாகக் கூறி அழைப்பு வந்தது. அழைப்பாளர் மாணவியின் தந்தையின் பெயர், பள்ளி மற்றும் முகவரி போன்ற பல தனிப்பட்ட விவரங்களை அறிந்திருந்தார். மேலும் பணத்தை 'DEPOSIT' செய்ய UPI-இணைக்கப்பட்ட தொலைபேசி எண்ணைக் கேட்டுள்ளார். தந்தை சந்தேகப்பட்டு பள்ளியைத் தொடர்புகொண்டு விசாரிக்க இது ஒரு மோசடி முயற்சி என தெரியவந்துள்ளது. ஆனால் அனைவரும் இந்த பெற்றோரைப் போன்று விழிப்புடனும், தெளிந்த புத்தியுடனும் செயல்படுவதில்லை. மாநிலம் முழுவதும் பல பெற்றோர்கள், குறிப்பாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் இதேபோன்ற மோசடிகளால் ரூ.5,000 முதல் ரூ.25,000 வரை இழந்துள்ளனர்.

### உதவித்தொகை மோசடிகள் எவ்வாறு செயல்படுகின்றன?

மோசடி செய்பவர்கள் பெரும்பாலும் அரசு அதிகாரிகள் அல்லது உதவித்தொகை திட்டங்களின் பிரதிநிதிகளாக தங்களைக் காட்டிக் கொண்டு தொலைபேசி அழைப்புகள் அல்லது வாட்ஸ்அப் மூலம் பெற்றோரைத் தொடர்பு கொண்டு உங்கள் குழந்தைக்கு உதவித்தொகை கிடைத்துள்ளது என கூறுகின்றனர். பெரும்பாலும் அந்த குடும்பத்தின் தனிப்பட்ட விவரங்களையும் கூறி நம்பகத்தன்மையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். பின்னர் அவர்கள் முக்கியமான தகவல்களை அவர்களிடம் கேட்கலாம். பணத்தை 'டெபாசிட்' செய்ய போலி QR குறியீடுகளை அனுப்பலாம் அல்லது 'செயலாக்க கட்டணம்' என்று முன்கூட்டியே பணம் செலுத்தக் கேட்கலாம். இதுபோன்ற QR குறியீடுகளை ஸ்கேன் செய்வது அல்லது வங்கி விவரங்களைப் பகிர்வது உடனடி பண இழப்பை ஏற்படுத்திவிடுகிறது. சில மோசடிகளில் உதவித்தொகைக்கு போலி காசோலையை அனுப்பி, பின்னர் பெறுநரிடம் 'வரி' அல்லது 'கட்டணங்களுக்கு' ஒரு பகுதியைத் திருப்பித் தருமாறு கேட்பதும் நடக்கிறது. வேறு சில மோசடிகளில் போலி உதவித்தொகைகளுக்கு விண்ணப்பம் அல்லது மீட்புக் கட்டணங்களை அனுப்பக்கேட்டு பணம் வசூலிக்கிறார்கள்.

இந்த SCHOLARSHIP மோசடிக்கு பல முகங்கள் உள்ளன. 2025ஆம் ஆண்டில், இந்தியாவில் சிறுபான்மை உதவித்தொகைகளுக்காக APPLY செய்யப்பட்ட நிறுவனங்களில் பாதிக்கும் மேற்பட்டவை போலியானவை அல்லது செயல்படாதவை என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. உதவித்தொகையைப் புதுப்பிக்க வந்த விண்ணப்பங்களில் பயோமெட்ரிக்சரிபார்ப்பில்30%மட்டுமேஉண்மையானவர்கள் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் படிப்பதற்காக விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கும் அவர்களுக்கேற்றவாறு இந்த மோசடியாளர்கள் பல வலைகளை விரிக்கின்றனர். அதே சமயம் உதவித்தொகை அளிக்கும் கல்வி நிறுவனங்களை ஏமாற்றி பணம் பறித்து, சிக்கி சிறை சென்ற மாணவர்களின் கதைகளும் இருக்கத்தான் செய்கிறது. எப்படியிருந்தாலும் இம்மோசடி செயல்கள் எல்லாம் தேவையுள்ள மாணவர்களுக்கு போய்ச் சேரவேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் உதவி பணத்தை தவறாகப் பயன்படுத்த வழிவகுக்கிறது.



### உதவித்தொகை மோசடிகளுக்கு ஆளாகாமல் இருக்க நடைமுறைக் குறிப்புகள் சில:

- தொலைபேசி, வாட்ஸ்அப் அல்லது மின்னஞ்சல் மூலம் தனிப்பட்ட அல்லது வங்கி விவரங்களை ஒருபோதும் பகிர வேண்டாம்.
- உத்தரவாதமான உதவித்தொகைகள் அல்லது நீங்கள் ஒருபோதும் பங்கேற்காத போட்டிகளுக்கான பரிசுகள் போன்ற சலுகைகளை நம்ப வேண்டாம்.
- உதவித்தொகைகளுக்கான விண்ணப்பம், செயலாக்கம் அல்லது மீட்புக் கட்டணங்களை ஒருபோதும் செலுத்த வேண்டாம். சட்டப்பூர்வ உதவித்தொகைகளின் பணத்தை பெறுவதற்கு ஒருபோதும் பணம் செலுத்த தேவையில்லை.
- நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்திலிருந்து தொடர்பு விவரங்களைப் பயன்படுத்தி பள்ளி அல்லது அதிகாரப்பூர்வ உதவித்தொகை வழங்குபவரை நேரடியாகத் தொடர்புகொண்டு தகவல்களைச் சரிபார்க்கலாம்.
- உதவித்தொகை பெற தகுதி அளவுகோல்கள் (QUALIFICATION CRITERIA), அதிகாரப்பூர்வ ஆவணங்கள் (OFFICIAL DOCUMENTS) மற்றும் பிற மாணவர்களிடமிருந்து மதிப்புரைகளைச் (STUDENT REVIEWS) சரிபார்க்கவும்.
- அவசர கோரிக்கைகள் அல்லது உணர்ச்சிபூர்வமான கையாளுதல் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். மோசடி செய்பவர்கள் பெரும்பாலும் சிந்திக்காமல் செயல்பட அவசர உணர்வை (SENSE OF URGENCY) உருவாக்குவார்கள்.

மத்தேயு 10:16இல் கூறப்பட்டுள்ளது போல் "சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய்" இருக்க அழைக்கப்படுகிறோம். வளைந்து நிற்கும் வஞ்சகத்தை எதிர்கொள்ளும்போது, நாம் உண்மையுடனும், எச்சரிக்கையுடனும் செயல்படவும், அதே நேரத்தில் தவறு செய்பவர்களுக்காக ஜெபிக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

### ஜெபக் குறிப்புகள்:

- ✦ பெரிய கனவுகளுடன் கல்வி கட்டணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போராடும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உரிய உதவிகள் கிடைக்க
- ✦ மோசடி செய்பவர்களின் இரட்சிப்பு மற்றும் மனமாற்றத்திற்காக, மோசடிகளால் பணத்தை இழந்த குடும்பங்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்க
- ✦ பெற்றோர்களும் மாணவர்களும் விழிப்புடன் செயல்பட, அவர்கள் சரிபார்க்கப்பட்ட ஆதாரங்களை மட்டுமே நம்ப,
- ✦ ஒவ்வொரு மாணவரும் வஞ்சகத்தின் வலையில் விழுந்துவிடுவோமோ என்ற அச்சமின்றி, படித்து முன்னேற தேவையான சமூக ஆதரவைப் பெற ஜெபிப்போம்.

# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

(நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)

# தளி திருச்சபை வரலாறு





பெரியமலையில் ஆரம்பிக்கப்பட்ட நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியமானது அதோடு நில்லாமல் அது தன் எல்லைகளை விரிவாக்கம் செய்யும் தேவப் பணியில் தீவிரம் காட்டியதன் விளைவாக மலர்ந்த திருச்சபைகளில் தளி திருச்சபையும் ஒன்றாகும். இது கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அமைந்துள்ள சட்டமன்ற பகுதியாகும். 1980ஆம் ஆண்டு இந்த பணித்தளம் தாமஸ் அண்ணன் இருந்த காலத்தில் உருவாக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை தளி பேருந்து நிலையம் பின்புறத்தில் மூன்று இடங்களில் ஆராதனை நடைபெற்றது. 1992ஆம் ஆண்டு ஆலயம் கட்டப்படுவதற்கு இடம் வாங்கப்பட்டது. 1993ஆம் ஆண்டு திருச்சி முன்னேற்றப்பணி மூலம் 1 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு, அதே ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

முதல் முதலில் சகோ. லூக்கா தயானந்த் அவர்களின் தகப்பனார் அரசாங்க பணியில் இருக்கும் போது சகோ. ஞானசேகர், சகோ. முத்தையா மற்றும் சகோ. சின்னசாமி இவர்களின் குடும்பங்கள் முதலில் கர்த்தரின் அன்பை ருசி பார்த்து, கர்த்தரின் மந்தையில் இணைக்கப்பட்டார்கள். தளி திருச்சபையை மையமாகக் கொண்டு பல இக்கட்டுகள் மத்தியில் உபவாசத்தோடும், ஆத்தும பாரத்தோடும் திரைப்படங்கள், கைபிரதி ஊழியங்கள் இதன் மத்தியில் கர்த்தரின் அன்பு மற்றும் தேவ ராஜ்யங்கள் கட்டப்படடு, சுமார் 5 கிளை சபைகள் இளையசந்திரம், பாலத்தொட்டனபள்ளி, கக்கதாசம், குண்டாலம், மாடக்கல் உருவாக்கப்பட்டு ஊழியம் நடைபெற்று, ஆத்துமாக்கள் தொடர்ந்து திருச்சபைக்கு வந்து கொண்டிருந்தார்கள். சுமார் 150க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பணித்தளத்தில் 10 மிஷனெரிகள் தேவ பணியைச் செய்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து சுதேச மிஷனெரிகள் 12 நபர்கள் தொடர்ந்து ஊழியம் செய்து வருகிறார்கள். 4 மிஷனெரிகள் இந்த திருச்சபையிலிருந்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்து முழு நேர பணி செய்து கொண்டு வருகிறார்கள். குறைந்தது 1000க்கும் அதிகமான மக்களுக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**துதிக்க:**

★ இந்த கிராமத்திலுள்ள திருச்சபை விசுவாசிகள், விசுவாசத்தில் உறுதியாக நின்று கிறிஸ்துவுக்காய் சாட்சி பகர்ந்தமைக்காக தேவனைத் துதியுங்கள்.

★ மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இப்பகுதி மக்கள் மத்தியில் தேவன் அற்புத அடையாளங்கள் மூலமாக தமது நாமத்தை மகிமைப்படுத்தி வருவதற்காக தேவனைத் துதியுங்கள்.

**ஜெபிக்க:**

★ இப்பகுதியிலுள்ள கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் மனம் மாறி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்திட ஜெபிப்போம்.

★ 1000 பேர் கொண்ட திருச்சபையாக மாற, சபை ஒரு தரிசனத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்தரிசனம் நிறைவேற ஜெபிப்போம்.

★ எழுப்புதலுக்காக ஜெபிக்கிற சபை தலைவர்கள், இரண்டாம் கட்ட தலைவர்கள் மற்றும் வாலிபர்கள் இவர்களின் வாஞ்சை நிறைவேற ஜெபிப்போம்.

★ சத்திரம் தொட்டி, குமளபுரம், பெலகொண்டப்பள்ளி, குனுகல் ஆகிய பகுதியில் புதிய திருச்சபை கட்டப்பட ஜெபிப்போம்.



Rev. Ruban Ramalingam

# ஜெபிக்கலாம் வா...

VIRAL NEWS









## தேசத்தையே கலங்க வைத்த விமான விபத்து

**Air India 171 crashed on a medical hostel building killing 241 people onboard and 60+ people in medical hostel**

- தேசத்தில் விபத்துக்கள் தடுக்கப்பட, பிரயாணங்களில் தேவ பாதுகாப்பு இருக்க ஜெபிப்போம்.
- விமான விபத்தில் தங்களுக்கு பிரியமானவர்களை இழந்தோருக்காக ஜெபிப்போம்.




## 11 DIED AND OVER 50 PEOPLE GOT INJURED IN STAMPEDE

சுவட்ட நெரிசலில் உயிரிழந்த மக்களின் குடும்பங்களுக்காக , காயப்பட்டோருக்காக ஜெபிப்போம் .



## IRON BRIDGE COLLAPSED IN PUNE

- ஆறுகள், நீர்நிலைகள், சுற்றுலா இடங்களில் பாதுகாப்பு, பராமரிப்பு பணிகள் ஏற்ற காலத்தில் செய்யப்படவும்,
- இது போன்ற சம்பவங்கள் இனி நடக்காதிருக்கவும் ஜெபிப்போம்.



## திருமணமான 12ஆம் நாளில் கணவனை கொன்ற மனைவி

**HONEYMOON MURDER CASE - RAJA RAGHUVANSHI AND SONAM RAGHUVANSHI**

- கொலை எண்ணங்களைக் கொண்டு வரும் சத்துருவின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.
- தவறான உறவுகளில் ஈடுபட்டுள்ளோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## ரீல்ஸ் மோகத்தில் வாழும் இன்றைய தலைமுறையினர்

- Social Mediaவுக்கு அடிமைப்பட்டிருப்போர் அதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.



உ.பியில் ரீல்ஸ் வீடியோவிற்காக விஷ பாம்பை முத்தமிட முயன்றவரின் நாக்கை கடித்த பாம்பு



கேரளாவில் ரீல்ஸ் வீடியோவிற்காக ஆபத்தான பாறை மீது SELFIE எடுக்க முயன்றவர் கால் தவறி விழுந்தார்



# பண்டிகை ஊழியம்

3rd WEEK MESSAGE
JESUS MISSION
Mr. M. Jerome Stanley

பண்டிகை கொண்டாட்டங்கள் என்றாலே நமக்குள் இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி தொற்றிக் கொள்கிறது. பண்டிகைகளின் மகிழ்ச்சியான தருணங்களில் தன்னை உற்றார் உறவினரோடு மற்றும் திருச்சபையோடு தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது மனிதனின் மறுக்க முடியாத உள்ளுணர்வு. இந்த உணர்வு சிருஷ்டிப்பு முதல் கடவுள் மனிதனுக்கு கொடுத்த இன்றியமையாத ஒன்று. வேதாகமம் சுட்டிக்காட்டும் பண்டிகைகளைப் பற்றி லேவியராகமம் 23ஆம் அத்தியாயம் நமக்கு விவரிக்கிறது. புளிப்பில்லா அப்ப பண்டிகை, பஸ்கா, முதற்கனியின் பண்டிகை, வாரங்களின் பண்டிகை, எக்காள பண்டிகை, பாவ நிவிர்த்தி நாள், கூடார பண்டிகை.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த மக்களைக் கடவுள் விடுவித்ததே அவர்கள் தனக்கென்று பண்டிகைகளைக் கொண்டாட வேண்டும் என்பதற்காக தான். கிறிஸ்துவை பற்றும் மெய் விசுவாசத்தில் வாழும் ஒவ்வொரு நபரும் பண்டிகைக்காரர்கள் தான். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டிகைகளைப் புரிந்துக் கொள்வதில் நமக்கு சிரமம் இருப்பதற்கு காரணம் அவையெல்லாம் நிலப்பரப்பு, பருவநிலை (Climate Condition) மற்றும் கலாச்சாரத்தை சார்ந்ததாக இருக்கிறது. இதனைச் சற்று விரிவாக பார்ப்போம். புளிப்பில்லா அப்ப பண்டிகை, பார்லி அறுவடை நாட்களில் அனுசரிக்கப்படும். பார்லி அறுவடை நாட்கள் முடிந்து சரியாக 50 நாட்களில் கோதுமை அறுவடை இந்நாட்களில் வாரங்களின் பண்டிகை கொண்டாடப்படும். கடைசியில் பழங்களின் அறுவடை காலங்களில் கூடாரப் பண்டிகை கொண்டாடப்படும். பருவநிலைகள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. அவர் இந்த உலகத்தைத் தாங்குகிறார். மற்றும் எல்லா உயிர்களுக்கும் ஆகாரம் கொடுக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். மேலும் கூடாரப் பண்டிகையில் எவ்வளவு பெரிய வீடுகளில் வசித்தாலும், தங்கள் வீட்டின் முன்பு தற்காலிக கூடாரங்களை அமைத்து ஏழு நாள் வரையிலும் குடும்பமாக அதில் வசித்து கூடாரப் பண்டிகையை அனுசரிப்பார்கள். இந்த உலக வாழ்வு நிரந்தரமல்ல, நம்முடைய வாழ்வு கிறிஸ்துவுடன் நித்தியமானது என்பதுதான் கூடாரப் பண்டிகையின் பொருள்.

7 பண்டிகைகள் இருக்கும்போது (உபா. 16:16), ஏன் கர்த்தர் 3 பண்டிகைகளைக் குறிப்பிட்டு சொல்லுகிறார்? இந்த பண்டிகைகள் எல்லாம் ஒன்றோடு ஒன்று பின்னி இணைந்திருக்கும் கயிறு போன்றது. புளிப்பில்லா அப்ப பண்டிகையில், புளிப்பில்லா அப்பங்களைத் தயார் செய்து ஏழு நாள் வரையிலும் அதனை சாப்பிட வேண்டும். சரியாக மூன்றாம் நாளில் பஸ்காவை நினைவு கூறும் வகையில் புளிப்பில்லா அப்பம், கசப்பான கீரை, திராட்சை ரசம் ஆகியவற்றை சாப்பிடுவார்கள். முடிவாக எட்டாம் நாள் அதாவது புளிப்பில்லா அப்பம் சாப்பிட ஆரம்பித்த வாரத்திற்கு பிறகு வரும் வாரத்தின் முதல் நாள் காலையில் தங்கள் பார்லி அறுவடையை ஆலயத்தில் சென்று படைத்து, முதற்கனிகளின் பண்டிகையை கொண்டாடுவார்கள். ஆக புளிப்பில்லா அப்ப பண்டிகை என்று சொல்லும்போது, அதனோடு மற்ற இரண்டு பண்டிகைகளும் இணைந்தே வரும். வாரங்கள் பண்டிகை தனித்த பண்டிகை, அது கோதுமை அறுவடைக் காலம். கடைசியாக கூடாரப் பண்டிகை ஏழு நாள் அனுசரிக்க வேண்டும். அதனோடு எக்காள பண்டிகையும், பாவநிவர்த்தி நாளும் சேர்ந்தே கொண்டாடப்பட வேண்டும். ஆக மூன்று என்று குறிப்பது அதனோடு இணைந்திருக்கும் மற்ற நான்கு பண்டிகைகளையும் சேர்த்தே குறிக்கிறது.

இப்போது பண்டிகைகளில் வேதாகம பின்னணியத்தைப் பார்ப்போம். முதல் பஸ்கா எகிப்தில் கொண்டாடப்படுகிறது. பத்தாவது பெரும் வாதையான தலைப்பிள்ளை சங்காரத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள ஒரு வயது நிரம்பிய ஆட்டை அடித்து, அதன் இரத்தத்தை நிலைக்கால்களில் பூசி, பயணத்திற்கு புறப்படுபவர்கள் அந்த ஆட்டை குடும்பமாக சாப்பிட்டார்கள். அதற்கு பிறகு சுமார் 2000 ஆண்டுகள் இந்த நிகழ்வை நினைவு கூறினார்கள். அவர்கள் நிழலோட்டமாய் நினைவு கூறியதின் வெளியரங்கமான வெளிப்பாடாய் இயேசு கிறிஸ்து சிலுவையில் முழு மனுக்குலத்திற்காகவும் பலியானார். இரவோடு இரவாக எகிப்தை விட்டு வெளியேற்றப்பட்ட இஸ்ரவேல் மக்கள், பிரயாண உணவிற்காக புளிக்காத மாவில் அப்பங்களைச் சுட்டு எடுத்துக் கொண்டார்கள். இந்த புளிப்பில்லா அப்பங்களின் நினைவாக "மாட்சா" (MATZAH) என்னும் அப்பங்களைப் பயன்படுத்தினார்கள். இந்த அப்பத்தில் ஊசியால் குத்தப்பட்ட சிறுசிறு ஓட்டைகள் இருக்கும். இது இயேசு கிறிஸ்துவின் பாவமில்லாத திருஉடலுக்கு அடையாளம். அவருடைய உடலும் நம்முடைய பாவங்களுக்காக முழுவதும் காயமாக்கப்பட்டது.

மேலும் பஸ்காவின் விருந்தில் பரிமாறப்பட்ட திராட்சைரசம் இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இவற்றைதான் தன்னுடைய கடைசி பஸ்கா விருந்தில் இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர் உயிர்த்தெழுந்தது முதற்கனிகளின் பண்டிகையில், அது பார்லியின் (வாற்கோதுமை) அறுவடை. நன்கு விளைந்திருக்கும் கதிர்களைப் பிரதான ஆசாரியன் வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் 10 ஓமர் அளவிற்கு அறுத்து பொதுமக்கள் கண்டுபிடிக்க முடியாதபடி தேவாலயத்தில் தன்னை மறைத்துக் கொள்வான். காலையில் தங்கள் வயல் நிலங்களுக்கு கதிர் அறுக்க செல்லும் மக்கள் பிரதான ஆசாரியன் 10 ஓமர் கதிர்களை அறுத்ததை உறுதி செய்ததுடன் தங்கள் நிலங்களில் அறுவடையை தொடங்குவார்கள். பின்பு பிரதான ஆசாரியன் தான் அறுத்த கதிர்களை அசைவாட்டும் பலியாகப் படைப்பான். இயேசு கிறிஸ்து கர்த்தருக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுவதற்கு முதற்பலனானவர் என்பதை பவுல் மிக தீர்க்கமாக கொரிந்து சபைக்கு எழுதுகிறார் (1 கொரி. 15:20-23). அவர் வாரத்தின் முதல் நாள் உயிர்த்தவுடன், கிறிஸ்துவிற்கு முன் மரித்த அனைத்து பரிசுத்தவான்களையும் அசைவாட்டும் பலியாக பிதாவினிடம் ஒப்படைத்தார். கிறிஸ்துவிற்கு முன் மரித்த பரிசுத்தவான்கள் நகரத்தில் காணப்பட்டார்கள் என்று மத். 27:51-53 பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது பிரதான ஆசாரியன் சடங்காக செய்ததை இயேசு கிறிஸ்து நிறைவேற்றினார். இதைத்தொடர்ந்து முதற்கனிகளின் பண்டிகையை 50வது நாள் பெந்தெகோஸ்தே பண்டிகை அன்றுதான் சபைக்கு தேற்றரவாளனான பரிசுத்த ஆவியானவர் கிடைக்கப்பெற்றார். இப்படி முதல் நான்கு பண்டிகை நிறைவேற்றப்பட்டது. மீதமுள்ள மூன்று பண்டிகைகளை அவர் நிறைவேற்றப் போகிறார்.

**இதை இன்று தான் நீ தெரிந்து கொண்டிருப்பாயானால், ஏன் இந்த பண்டிகை செய்தியை உன்னைச் சுற்றிவுள்ள கிறிஸ்தவ வட்டாரத்திற்கு கொண்டு செல்லக்கூடாது. வேதத்தை இன்னும் ஆராய்ந்து ஞான அர்த்தங்களைக் கண்டு, அதை பிறருக்கு விளக்கி சொல்ல தேவன் உன்னை அழைக்கிறார்! வா!**

# சச்சரவு மற்றும் மோதலைத் தீர்ப்பதற்கான வேதாகம உத்திகள்

## Scriptural Strategies for Conflict Resolution

Mr. Isaac Kamalesh

சண்டை சச்சரவுகளுக்கு பாவமே மூல காரணம் என்பதை வேதம் மூலம் அறியலாம். வேதாகமத்தில் காணப்படும் முரண்பாட்டின் முதல் நிகழ்வு - பாவம் நமது கண்ணோட்டங்களை மாற்றுவதின் மூலம் மனிதனின் பெருமையைத் தூண்டுகிறது (ஆதி. 3:1-13) மற்றும் பகுத்தறிவுடன் பதிலளிக்கும் நமது திறனைக் குருடாக்குகிறது (ஆதி. 4:5-10). ஆரம்பத்திலிருந்தே, பாவம் நமது தனிப்பட்ட உறவுகளைப் பாதித்து, நமது கடவுளுடனான தொடர்பைத் துண்டித்துள்ளது. இந்தக் காரணத்திற்காகவே கிறிஸ்து பூமிக்கு வந்தார், அவர் சமாதானத்தை ஈவாக கொண்டு வந்தார். சங்கீதத்தில் “தீமையை விட்டு விலகி நன்மை செய்யுங்கள்; சமாதானத்தைத் தேடி அதைத் தொடருங்கள்” என்று நமக்குச் சொல்லப்படுகிறது. இயேசு நம்மை சமாதானத்தை உருவாக்குபவர்களாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறார் (மத். 5:9), அப்போஸ்தலன் பவுல் சமாதானமாக வாழ பாடுபடுமாறு ஊக்குவிக்கிறார் (ரோமர் 12:18). இந்த வசனங்களில் காணப்படும் “சமாதானம்” என்ற சொல் அமைதி அல்லது மோதல் இல்லாமையை அதிகமாகக் குறிக்கிறது. ஆனால் ஒற்றுமையை - குறிப்பாக, கடவுளின் முழுமையை பரிசுத்த ஆவியால்தான் நம்மைச் சுற்றியுள்ளவர்களுடனான உறவுகளில் சமாதானமாக இருக்க முடிகிறது. இந்த வேதாகம அடித்தளம், நமது தனிப்பட்ட உறவுகளை மிக எளிதாக சிக்க வைக்கும் பாவத்தை ஒப்புக்கொள்ளவும் (எபி. 12:1), சமாதானத்தின் பிணைப்பைப் பராமரிக்கவும் நம்மை அனுமதிக்கிறது (எபே. 4:3). இதைக் கருத்தில் கொண்டு, வேதாகமத்தில் காணக்கூடிய நான்கு மோதல் தீர்க்கும் திறன்களைப் பார்ப்போம். அவை ஆதாரத்துடன் உள்ளன.

### மோதலைத் தீர்க்க 4 உத்திகள்

வேதத்தால் ஆதரிக்கப்படும் இந்த நான்கு உத்திகளைப் பார்ப்போம். அவை நமது சம்பாஷணையை வளர்க்கவும், அமைதியைத் தேடுவதில் நமது விழிப்புணர்வைக் கொண்டுவரவும் உதவும். இந்தத் திறன்களை நினைவில் கொள்ள, CALM என்ற சுருக்கத்தைப் பயன்படுத்தலாம்.

**1. CONNECT - தொடர்பு:**

மோதல் தீர்வுக்கான முதல் படி ‘தொடர்பு’. பெரும்பாலான மோதல்களில், தொடர்பு நிறுவப்படாவிட்டால் தீர்வு இருக்காது. வேண்டுமென்றே சச்சரவு மோதலில் இருக்க முயல்கிறது. இது தவிர்க்கவோ அல்லது குறைக்கவோ அல்லது மன்னிக்கவோ செய்யாது. மத். 5:21-24இல், மோதலைத் தவிர்ப்பதன் விளைவுகள் குறித்து இயேசு நமக்கு எச்சரிக்கிறார். மேலும் விசுவாசி கர்த்தருக்குக் காணிக்கைகளை வழங்குவதற்கு முன்பு மற்றவர்களுடன் தீர்வைத் தேட அறிவுறுத்துகிறார். எனவே, ஒரு மோதல் ஏற்பட்ட இடத்தில் நாம் தொடர்பு கொள்ள வேண்டுமானால், கிறிஸ்து செய்தது போல நாம் செய்ய வேண்டும். யாரும் கடவுளின் கிருபையிலிருந்து விடுபடக்கூடாது, எந்த கசப்பான வேர்களும் பிரச்சனையை ஏற்படுத்த கூடாது (எபி. 12:15).

**2. ASSESS - மதிப்பீடு செய்யுங்கள்:**

சச்சரவு ஏற்படும் போது, சூழ்நிலையைப் பற்றிய நமது கண்ணோட்டத்தை மதிப்பிடுவதும் முக்கியம். ஏனென்றால், நாம் பெரும்பாலும் நமது பார்வையிலிருந்துதான் பதிலளிப்போம். எனவே, மோதலுடன் தொடர்புடைய எண்ணங்கள், நம்பிக்கைகள் மற்றும் உணர்வுகளை எவ்வாறு மதிப்பிடுவது என்பதைக் கற்றுக்கொள்வது, நாம் இன்னும் தெளிவாகத் தொடர்பு கொள்ளவும், அதை பராமரிக்கவும், வாய்மொழி வாக்குவாதங்களைக் குறைக்கவும் உதவும். மோதல் தீர்வுக்கான இந்த உள்நோக்க அணுகுமுறையை வேதம் ஊக்குவிக்கிறது (நீதி. 15:1, 28; 12:18).

**மதிப்பீடு செய்ய உதவும் சுய ஒழுங்குமுறைக்கான சில திறன்கள்:**

- கேள்விகள் (உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்: என்ன எண்ணங்கள், நம்பிக்கைகள், உணர்வுகள் உள்ளன).
- உடல் விழிப்புணர்வு (உங்கள் உடல் - பதற்றத்தின் அழுத்தத்தை எவ்வாறு தாங்குகிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்).
- தளர்வு (RELAXATION) (சுவாசப் பயிற்சி, கற்பனை எண்ணங்களை நிறுத்த வேண்டும், ஜெபிக்கவும்).

**3. LISTEN - கவனி (கேள்):**

ஒருவருக்கொருவர் சந்திக்கும் மோதல்களில், நாம் மற்றவருடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தவில்லை அல்லது நமது உள் கண்ணோட்டங்களை மதிப்பிடவில்லை என்றால் கேட்பது கடினமாகிவிடும். நாம் தற்காப்பு மற்றும் உரையாடலில் உள்ள மற்றவர் நமக்கு எதிரானவர் என்ற கருத்துடன் நாம் உரையாடலைத் தொடங்கினால், அது நமது உணர்வுகளை பிரதிபலிக்கும். “ஒவ்வொரு நபரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்”. ஏனென்றால் மனிதனின் கோபம் கடவுளின் நீதியை உருவாக்காது” என்று யாக்கோபு தன் நிருபத்தில் குறிப்பிடுகிறார்.

நம் வாழ்வில் கடவுளின் வார்த்தையையும் குரலையும் கேட்பதோடு மட்டுமல்லாமல், மோதலுக்குள் நமது கேட்கும் திறன்களை அதிகரிப்பதற்கான சில நடைமுறைகளையும் பயிற்சி எடுக்க வேண்டும்:

- மற்றவர்களின் உணர்வுகள் மற்றும் எண்ணங்களை உணர்தல் (“ம்ம்ம... அது எவ்வளவு வெறுப்பூட்டும் என்பதை நான் உணர்கிறேன்”)
- ASKING REVEALING QUESTIONS - வெளிப்படையான கேள்விகளைக் கேட்பது (என் கருத்தில் உங்களை மிகவும் வருத்தப்படுத்தியது எது?)
- SEEKING CLARIFICATION - தெளிவுப்படுத்தலை கடைபிடிக்க வேண்டும்.

**4. MAINTAIN - முன்னேறுதல்**

இறுதியாக, சச்சரவுகளுக்கான தீர்வின் குறிக்கோள் நமது உறவுகளில் ஒற்றுமையைப் பேணுவதும், மற்றவர்களுடனான நமது உறவை மீட்டெடுப்பதும் ஆகும். இருப்பினும், துஷ்பிரயோகம் மற்றும் உணர்ச்சி ரீதியான துன்புறுத்தல் போன்ற வடிவங்களில் சமரசம் ஏற்படாமலோ அல்லது மன்னியாமையோ இருக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும் (லூக்கா 17:3). வேதம் தனிப்பட்ட மன்னிப்புக்கு உத்தரவிடுகிறது. மற்றும் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் விரைவாக சமரசம் செய்ய அறிவுறுத்துகிறது. இருப்பினும், ஆழமான காயங்கள், நம்பிக்கை உடைவு மற்றும் சட்டவிரோத நடத்தைக்கு வழிவகுக்கும் மோதல் சூழ்நிலைகளில், ஒற்றுமை மற்றும் மறுசீரமைப்பைப் பராமரிப்பதற்கு நேரம் ஆகலாம், மேலும் சில சந்தர்ப்பங்களில் குற்றவாளி தங்கள் தவறுகளை ஒப்புக்கொண்டு மாற்றத்தைத் தொடர விரும்பவில்லை என்றால் அது நிகழாமலும் போகலாம் (மத்தேயு 18:15-19).


ஆனால் பவுல் சொல்லுவது, “சமாதானத்தின் பிணைப்பின் மூலம் ஆவியின் ஒற்றுமையைக் காக்க எல்லா முயற்சிகளையும் எடுங்கள்” (எபே. 4:3). மோதல் மற்றும் சச்சரவு ஏற்படும் போது ஒற்றுமையைப் பேணுவதற்கு மூன்று சிறந்த வழிகள் நமக்கு வழங்கப்பட்டுள்ளன (எபே. 4):

- நேர்மையாகப் பேசுங்கள் (வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை).
- காலம் தாழ்த்த வேண்டாம் (உங்கள் விரக்திகளை விரைவில் பகிர்ந்து கொள்ளுங்கள்).
- மரியாதையுடன் பேசுங்கள்

சச்சரவு மற்றும் மோதலைத் தவிர்க்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதை நாம் எவ்வாறு அணுகுகிறோம் என்பதுதான் எல்லா வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறது. நமது மோதல்களில் கிறிஸ்துவின் முழுமையின் அமைதியைப் பின்பற்றத் தொடங்குவோம்.



# வாசற்படியில் தாண் புத்திரர்



நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் அநேக நேரங்களில் நல்ல காரியங்களைத் தேவனுக்காக செய்ய வேண்டும் என்று எண்ணுவதுண்டு. அது அநேக நேரங்களில் சரியானதா என்பதைக் கண்டறிய தேவ சித்தத்தை அறிந்து செயல்படுவதை நாம் மறந்து விடுகிறோம் என்பதை நியா. 17, 18 ஆகிய அதிகாரங்களில் மீகாவின் வாழ்விலிருந்து ஒரு சில பாடங்களைத் தேவன் கற்றுக் கொடுக்கிறார். தேவனுக்காக எதையாவது செய்ய வேண்டும் என துடித்த மீகா நல்லதைச் செய்தார். ஆனால் சரியானபடி செய்ய மறந்து போனார் (நியா. 17:6 & 18:1). காரணம் அந்நாட்களிலே ராஜா இல்லை. அவரவர் தங்கள் பார்வைக்கு நலமானபடி செய்தார்கள் என்று இரண்டு இடங்களில் குறிப்பிடப்படுகிறது. தேவனுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று துடிப்பதை விட தேவன் விரும்புவதைச் செய்கிறோமா என்பதை இந்த பகுதி நமக்கு தெளிவுபடுத்துகிறது. மீகாவும், அவனுடைய தாயாரும் தெய்வ பக்தி நிறைந்தவர்களாக இருக்க விரும்பியிருக்கலாம் (17:2, 3). ஆனால் அது தேவ சித்தத்தின்படி இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள மறந்து போனார்கள். ஆகவே நாம் செய்கிற அனைத்தும் தேவ சித்தத்தை மையமாக கொண்டுள்ளதா அல்லது நமது சொந்த சித்தத்தின் மையமாக உள்ளதா என்பதை இந்த பகுதி நமக்கு வெளிக்காட்டுகிறது.

### கண்டுபிடியுங்கள் (IDENTIFY THE IDOL) (நியா. 17:13):

தேவனை விட்டு எதெல்லாம் நம்மை பிரிக்கிறதோ, அதெல்லாம் நம்முடைய வாழ்வில் விக்கிரகமாக மாறும். அதைக் கண்டுபிடித்து நம்முடைய வாழ்வை விட்டு விலக்காத வரை தேவனுக்கும், நமக்கும் பிரிவினையாக நின்று தேவன் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதத்திற்குத் தடையாக நிற்கும். மீகா உருவாக்கிய விக்கிரகங்கள் எல்லாம் அவனுடைய வீட்டில் இருப்பதால் ஆசீர்வாதம் என்று தவறாக நினைத்திருந்தான். தேவன் விரும்பாததும், தேவனுடைய கரத்திலிருந்து வராத அனைத்தும் நம்முடைய இல்லத்திலும், உள்ளத்திலும் இருந்தால் அதுவே விக்கிரகங்களாக மாறிவிடக்கூடும். அதைக் கண்டுபிடித்து நம் வாழ்விலிருந்து வெளியேற்றும் வரை ஆசீர்வாதம் கிடையாது. தேவனுக்கு கொடுக்க வேண்டிய இடத்தை வேறு எதற்குக் கொடுத்திருந்தாலும் அவை அனைத்தும் விக்கிரகமாக மாறி தேவ திட்டத்தைத் தடுக்கும். அது எவைகள் என்பதை கண்டுபிடித்துத் தூக்கி வெளியே எறிய வேண்டும்.

### காணாதழியுங்கள் (DON'T DEVELOPS YOUR IDOLS) (நியா. 18:16):

மீகா உருவாக்கினது அவனோடு மட்டும் நில்லாது அவன் குடும்பத்தையும், தாண் கோத்திரத்தையும் தேவனை விட்டு பிரிக்கும் விக்கிரகமானது. மீகா மற்றும் தாண் மக்களின் வாழ்வு தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டவர்களிடையே கூட இஸ்ரவேல் சமூகத்திற்குள்ளும் உருவ வழிபாடு மற்றும் பொய்யான வழிபாடு பரவியிருந்ததைக் காட்டுகிறது. மீகா மற்றும் தாண் மக்கள் இருவரும் தாங்களேத் தங்கள் சொந்த மத நடைமுறைகளையும், வழிமுறைகளையும் நிறுவ முயன்றனர். தேவன் கட்டளையிட்ட வழிபாட்டு முறைகளையும், வழிகாட்டுதல்களையும் புறக்கணித்தனர். இவை அனைத்தும் நம்முடைய நடைமுறை வாழ்வில் வரும் போராட்டங்கள், சோதனைகள், நெருக்கங்கள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் உருவாகிறது. மீகா தனது வாழ்வில் ஆசீர்வாதத்திற்காக தேவனைத் தேடாமல் தேவ ரூபங்களை அவனே உருவாக்குவதை பார்க்கிறோம். அப்படி ஏதாவது நம் வாழ்வில் இருந்தால் அழித்துவிட இந்த பகுதி நமக்கு நினைவூட்டுகிறது.

### கடைப்பிடியுங்கள் (OBEY GOD'S WORD) (நியா. 18:20):

நாம் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனை மையமாக வைத்து வாழும் வாழ்வைக் கைக்கொள்ள வேண்டும். தேவன் நம் வாழ்வின் மையத்திலிருந்து விலகினால் ஆசீர்வாதம் கிடையாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அனுதினமும் தேவ வார்த்தையை வாசித்து, அதற்கு கீழ்ப்படியவும் அழைக்கப்படுகிறோம். ஆலயமோ, ஆசாரியனோ இல்லை என்பதினால் மீகா தனக்கென்று ஆசாரியனையும், விக்கிரகத்தையும் உருவாக்கி அதற்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தால் ஆசீர்வாதம் என்று நினைத்தான். தேவனோடும், அவருடைய வார்த்தையோடும் ஒருமித்து வாழாத பொழுது இப்படிப்பட்ட கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாக மாற முடியும். தேவனை நம் வாழ்வின் மையத்தை விட்டு விலக்கும் போது ஆசீர்வாதம் கிடைக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அனுதினமும் வேதம் வாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து நம் வாழ்வைச் சரி செய்யாத வரை நம்முடைய வாழ்வில் ஆசீர்வாதத்தை எதிர்பார்க்க முடியாது.

### கடைசி வரை நிலைத்திருங்கள் (LIVE A VICTORIOUS LIFE):

நம்முடைய வாழ்வில் சுய விருப்பங்கள் தேவைகள் தேவனை விட அதிகரிக்கும் போது அதுவும் விக்கிரகமாக மாறி நம்மையும், தேவனையும் பிரித்து விடுகின்றன. அவ்வாறாக நமக்கும், தேவனுக்குமிடையில் எதுவும் வராமல் உலகத்திற்கோ, மாம்சத்திற்கோ, பிசாசுக்கோ இடங்கொடாமல், தேவனை நம்முடைய வாழ்வில் மையமாக வைக்கும் பொழுது நாம் விக்கிரகங்களுக்கு விலகி வாழ்வதோடு கடைசி வரைக்கும் கிறிஸ்துவோடு கூட வெற்றி சிறந்த வாழ்வை வாழ்ந்திட முடியும். மீகாவின் காலத்தைப் போலவே இன்றும் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த நலன்களை முதன்மையாகக் கருதுவதாக தெரிகிறது. மீகாவின் காலத்திலுள்ள மக்கள் கடவுளின் உண்மையான வழிபாட்டை வீட்டில் தயாரிக்கப்பட்ட சிலைகளுக்கு மாற்றியதின் விளைவாக தேவநீதி திசை திருப்பப்பட்டது. உண்மையான ஆராதனையின் முக்கியத்துவம், பொய்யான வழிபாட்டின் ஆபத்துகள் மற்றும் அவருடைய வார்த்தையின்படி கடவுளுக்கு உண்மையான கீழ்ப்படிதலின் அவசியம் பற்றிய எச்சரிக்கையாக நியா. 17-18இல் எழுதப்பட்டுள்ளது. ஆவிக்குரிய வாழ்வில் எவ்வளவோ குழப்பம் இருந்தபோதிலும், இந்தப் பகுதி மறைமுகமாக தேவனின் தொடர்ச்சியான வழிநடத்துதலையும், அவரது ராஜ்ஜியத்தின் திட்டத்தை நிறைவேற்றியதையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆகவே நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் தேவனுக்கு விரோதமாகக் காணப்படும் விக்கிரகங்களைக் கண்டுபிடித்து, அவைகளை அழித்து தேவ வசனத்துக்கு கீழ்ப்படிந்து இறுதிவரை நிலைத்திருந்து தேவ திட்டத்தை நிறைவேற்றுவோமாக. கர்த்தர் தாமே நமக்கு உதவுவாராக!




# செம்மறியாடு & வெள்ளாடு

Rev. Daniel Gnanapragasam



வேதாகமத்தில் பரலோக ராஜ்ஜியத்தின் மதிப்பீடுகளை அநேக எடுத்துக்காட்டுகள் மூலமாக விளங்கிக் கொள்ள முடியும். இயேசு கிறிஸ்துவின் போதனைகளும், அற்புதங்களும், அடையாளங்களும் வரப்போகும் காலத்திற்கு நிழலாட்டமாக உருவகப்படுத்தப்பட்டுள்ள உவமைகளும், ஒப்புமைகளுமே. இந்த செம்மறியாடு, வெள்ளாடு ஒரு விசுவாசியின் நற்கிரியை அல்லது துர்க்கிரியை போன்ற இரண்டு வித சுபாவங்களை வெளிப்படுத்துகிறது. மேலும் தான் செய்த கிரியைகளுக்குத் தக்க நியாயத்தீர்ப்பு உண்டு என்பதை அடையாளப்படுத்துகிறது. இங்கே இந்த இரண்டு வகையான ஆடுகளின் சுபாவங்களைப் பிரித்து, பகுத்து பதில் செய்யும் மேய்ப்பனின் பங்கும் முக்கியமானது. மத். 25:32-46இன் படி வலப்பக்கம், இடப்பக்கம் என பிரித்து, அவர்களின் கனி நிறைந்த விசுவாச வாழ்விற்கு வெகுமதிகளைக் கொடுத்து, கௌரவப்படுத்தி மகிழ்வதும், கனியற்ற ஜீவியத்திற்கு நித்திய பங்காகிய சாபத்தின் அக்கினியால் ஆக்கினைத் தீர்ப்பும் தவிர்க்க இயலாததாய் சுட்டிக்காட்டுகிறார்.

| | செம்மறியாடு | வெள்ளாடு |
|---|---|---|
| 1. | மென்மையான, சாந்தமான, நம்பிக்கையான விலங்காக சித்தரிக்கப்படுகிறது (யோவான் 10:4). | சுதந்திரத்திற்கும், பிடிவாதத்திற்கும் கரடு முரடாக செல்லும் சுபாவத்திற்கும் சொல்லப்பட்டது. |
| 2. | மேய்ப்பனின் சத்தம் கேட்டு பின்பற்றும் ஆடு (யோவான் 10:14). | கீழ்ப்படியாமையின் அடையாளமும், மேய்ப்பனின் சத்தத்தை உதாசீனம் பண்ணும் ஆடாகும். (மத்தேயு 7:23). |
| 3. | வலது பக்கத்தில் நிறுத்தப்பட்ட ஆடு. | இடது பக்கம் வகைப்படுத்தப்பட்ட ஆடு. |
| 4. | நற்கிரியைகள் செய்யும் சுபாவத்தோடு இணைக்கப்பட்டது. | துர்க்கிரியைச் செய்யும் ஆடாக அடையாளம் காணப்படுகிறது (யோவான் 3:18). |
| 5. | இரட்சிக்கப்பட்ட நிலையோடு நிலை வாழ்வு பெற்றுக் கொள்கிறது (யோவான் 10:28) | இரட்சிப்பை நிராகரித்த விசுவாசியின் நிலையை விளக்குகிறது. |
| 6. | நீதியுள்ள நிலைமை (மத். 25:37). | அநீதத்தின் அடையாளம் (மத். 25:41). |
| 7. | ஆசீர்வாதத்தின் அடையாளம். | சாபத்தின் அடையாளம். |
| 8. | கம்பளி உடைக்காக வளர்க்கப்படுகிறது. | உணவுக்காக வளர்க்கப்படுகிறது. |
| 9. | எப்பொழுதும் கூட்டமாக கடந்து செல்லும். | தனித்து விடப்பட்டது போல கூட்டத்தை விட்டு விலகிச் செல்லும். |
| 10. | பசும் புற்கள் மாத்திரம் தின்னும். | எல்லா பச்சையான செடி, கொடிகளையும் தின்னும். |

காணாமற்போன ஆடுகளைத் தேடி கண்டுபிடித்து, அவைகளுக்கு ஜீவன் தரும் நல்ல மேய்ப்பனாகவும், ஓநாய்களுக்குள்ளே கிடந்தாலும், சிதறி எங்கும் திரிந்தாலும் நிலைவாழ்வுக்கு நேராக நடத்தும் நல்ல மேய்ப்பனாகவும் நம் ஆண்டவர் இருக்கிறார். மேய்ப்பனின் சத்தம் கேட்டு எச்சரிப்படைந்து (வலது பக்கத்தில்) நல்வழியில் செல்லும் செம்மறியாடாக நற்கிரியைகளை நடப்பித்து, நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்ள நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களை வருந்தி அழைக்கிறார். நிலையான நித்திய வாழ்வை அவரால் மாத்திரமே தரமுடியும் என்பதை உணர்ந்து செயல்படுவோம். தேவன் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!



# சாட்சிகளாயிருக்கும் ஊழியம்

Mr. Israel Nathaniel Edward

4th WEEK MESSAGE

NT MISSION

“ஊழியம்” (கிரேக்க மொழியில் DIAKONIA) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்கு சேவை செய்வது என்று பொருள். ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கிபி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் நாம் சாட்சிகளாயிருக்கும் ஊழியத்தைப் பற்றிப் பார்க்க இருக்கிறோம்.

கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பதற்கான அழைப்பு அப். 8:1இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ‘சாட்சி’ என்ற சொல் மூன்று வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்கலாம். சட்டம் சார்ந்த அர்த்தத்தில், அவர் கண்டதைப் பற்றி சாட்சியமளிக்கும் ஒருவர்; வரலாற்று அர்த்தத்தில், அவர் ஒரு பார்வையாளர்; மற்றும் நெறிமுறை சார்ந்த அர்த்தத்தில், வன்முறை மரணத்திற்கு உட்பட்டு கிறிஸ்துவில் தனக்கிருந்த உண்மையான நம்பிக்கையை நிரூபித்தவர். எனவே, முதல் நூற்றாண்டு திருச்சபையில், அப்போஸ்தலர்கள் மற்றும் தலைவர்கள் உட்பட அனைத்து விசுவாசிகளும் நம் கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருந்தனர். இதை அவர்கள்: (I) இயேசு யார் என்றும், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் நமக்கு எப்படிப்பட்ட நம்பிக்கையை கொடுக்கிறது என்பதையும் வாய்மொழி சாட்சியின் மூலமும், (II) அவர்களின் விசுவாசத்தைப் பிரதிபலிக்கும் செயல்களான விசுவாசத்திற்காக துன்பப்படுதல் மற்றும் மரித்தலாலும் வெளிப்படுத்தினர். இந்த ஊழியம் ஒருவரின் சொந்த பலம் அல்லது சித்தத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, அது பரிசுத்த ஆவியானவர் அருளும் பெலத்தினால் மேற்கொள்ளப்பட்டது. எனவே, கிறிஸ்துவின் சாட்சிகளாக இருக்க வேண்டிய கட்டளை அவரைப் பற்றியது. அது அவரது பலத்தின் மூலமே நிறைவேற்றப்பட வேண்டும். உலகத்தின் முடிவுபரியந்தம் நம்மோடு இருப்பேன் என்ற அவருடைய வாக்குறுதியின் அடிப்படையிலும் அது அமைந்துள்ளது (மத். 28:20).

### வாய்மொழி சாட்சி:

பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் யூதர்களுக்குப் பயந்து, இயேசுவின் மரணத்திற்குப் பிறகு பூட்டிய வீட்டுக்குள்ளேயே தங்கினார்கள் என்பதை நாம் அறிவோம் (யோவான் 20:19). ஆனால் பெந்தகோஸ்தே நாளில், அப்போஸ்தலர்களும் மற்ற சீடர்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர் (அப். 2:4). உடனே, அவர்கள் பரிசுத்த ஆவியினால் தைரியம் பெற்றனர். பதினொரு பேருடன் எழுந்து நின்ற பேதுரு, கர்த்தராகிய இயேசுவின் வாழ்வின் முக்கியத்துவத்தை தன்னை செவிமடுத்தவருக்கு எடுத்துச் சொல்லத் தொடங்கினார் (அப். 2:22FF). இயேசுவைக் கொன்றதாக யூதர்கள் மீது குற்றம் சாட்டும் அளவுக்கு அவர் தைரியமாக இருந்தார் (அப். 2:23). இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு அவர் சாட்சியளித்தார். மேலும் அவரே கர்த்தரும், கிறிஸ்துவுமாய் இருக்கிறார் என்றும் அறிவித்தார் (அப். 2:36). மற்றொரு சம்பவத்தில் பேதுருவும், யோவானும் ஜெப ஆலய தலைவர்கள், மூப்பர்கள், வேதபாரகர்கள் மற்றும் பிரதான ஆசாரியருக்கு முன்பாக நிற்க வைக்கப்பட்டபோது தைரியமாக சாட்சி பகர்ந்தனர் (அப். 4:5-6). கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைத் தவிர இரட்சிப்படைய வேறு வழி இல்லை என்று அவர்கள் அறிவித்தார்கள் (அப். 4:12). இதே சாட்சியை மற்ற பல சந்தர்ப்பங்களிலும் நாம் காண்கிறோம் (அப். 5:29-32, 42; 6:9-10; 8:12; 9:20-22). சாதாரண விசுவாசிகளும்கூட இயேசுவைக்குறித்துச் சாட்சிகொடுத்தார்கள் (அப். 8:4; 11:19-20).

இதைப் போலவே, இயேசு மட்டுமே ஒருவருடைய பாவங்களை மன்னிக்கவும், நித்திய மரணத்தின் தண்டனையிலிருந்து அவரைக் காப்பாற்றவும் முடியும் என்பதை அறிவிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஏனெனில், பாவமற்ற இயேசுவே பாவிகளான நம் சார்பாக மரித்தார். இன்று கிட்டத்தட்ட ஒவ்வொரு சாட்சியும் மனிதனைப் பெருமைப்படுத்துவதாயும், மற்றும் அவர்களின் நம்பிக்கையை மகிமைப்படுத்துவதுமாயிருக்கிறது. ஆனால் கடவுளின் வார்த்தை தெளிவுபடுத்துவது போல், நம்முடைய சாட்சி பகர்தல்கள் இயேசு கிறிஸ்து மட்டுமே இரட்சகர் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வழிவகுக்க வேண்டும். உங்கள் நம்பிக்கையின் காரணத்தைக் கேட்கும் ஒவ்வொருவருக்கும் பதிலளிக்க நீங்கள் எப்போதும் தயாராக இருக்கிறீர்களா? (1 பேதுரு 3:15)

### சாட்சிகளாய் வாழுதல்:

முதல் நூற்றாண்டு திருச்சபையில் விசுவாசிகளின் வாழ்க்கை, அவர்களின் செயல்கள் மற்றும் குணநலன்கள் மூலம் மறுரூபமாக்கும் கிறிஸ்துவின் வல்லமையைப் பிரதிபலித்தது. மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது,

அவர்கள் உடனடியாக விசுவாசிகளின் ஐக்கியம், குழுவாக கடவுளின் வார்த்தையை கற்றுக்கொள்ளுதல் மற்றும் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர் (அப். 2:42, 5:42). இதன் விளைவாக அவர்கள் மத்தியில் ஒற்றுமையும், ஒருமனமும் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் மற்றவர்களைக் கவனித்துக் கொண்டனர். தங்கள் பொருள் உடைமைகளை விருப்பத்துடன் பகிர்ந்து கொண்டனர் (2:44-45, 4:32-35). கிறிஸ்தவ அன்பின் இந்த வெளிப்பாடு இன்னும் பலரை திருச்சபையின் ஐக்கியத்துக்குள் கொண்டு வந்தது (அப். 2:47, 5:41).

தங்கள் நம்பிக்கையின் காரணமாக அவர்கள் துன்புறுத்தப்பட்டபோது, அவர்கள் கடவுளுக்கு எதிராக முறுமுறுக்கவோ, அல்லது தங்களைக் குற்றப்படுத்தியவர்களுக்குப் பதிலடி கொடுக்கவோ முனையவில்லை. அதற்கு பதிலாக, வார்த்தையை தைரியமாகப் பேச கடவுள் தங்களைப் பலப்படுத்தவும், கர்த்தராகிய இயேசுவின் பெயரால் குணப்படுத்துதல்களும், அதிசயங்களும் பெருகவும் அவர்கள் ஜெபித்தனர் (அப். 4:29-31). கர்த்தராகிய இயேசுவினிமித்தம் தாங்கள் பாடுபட பாத்திரவான்களாக கருதப்பட்டதற்காக மகிழ்ந்தார்கள் (அப். 5:41, 16:25). யாக்கோபு, ஸ்தேவான் போன்ற சீடர்கள் விசுவாசத்தைக் கைவிடாமல் இரத்தசாட்சியாக மரித்தனர் (அப். 7:60, 12:2). இவ்வாறு துன்புறுத்தல் சபை வளர்ச்சியை நிறுத்தவில்லை; மாறாக அது நற்செய்தியின் விரைவான பரவுதலுக்கு உதவியாக இருந்தது (அப். 8:4, 11:19, 18:2-3, 18:26).

மேலும், உயிருள்ள சாட்சிகளாக இருப்பதன் ஒரு பகுதியாக, விசுவாசிகள் ஆரம்பத்தில் இருந்தே பரிசுத்தமாக வாழ அறிவுறுத்தப்பட்டனர். பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு விசுவாசமுள்ள யூதர்களை தங்கள் சமகாலத்தவர்களின் கோணலான வழிகளைப் பின்பற்ற வேண்டாம் என்று அறிவுறுத்தினார் (அப். 2:40). எருசலேம் சபை புறஜாதி விசுவாசிகளை விக்கிரகங்களுக்கு பலியிடப்பட்ட உணவு, இரத்தம் சாப்பிடுதல் மற்றும் பாலியல் ஒழுக்கக்கேடு ஆகியவற்றிலிருந்து விலகியிருக்க அறிவுறுத்தியது (அப். 15:29). அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களில், பரிசுத்தமான வாழ்க்கையை வாழ விசுவாசிகளை மீண்டும் மீண்டும் நினைவூட்டினர் (ரோமர் 13:12-14, எபே. 5:3-5, 1 பேதுரு 1:14-16). மேலும், திருச்சபை தலைவர்கள் நல்ல மாதிரிகளாக இருக்க அறிவுறுத்தப்பட்டனர் (1தீமோ. 4:12, 16; தீத்து 2:7, 1 பேதுரு 5:3).

**கிறிஸ்துவுக்கு உயிருள்ள சாட்சியாக, உங்கள் வாழ்க்கை பரிசுத்தத்தின் அடையாளங்களைக் கொண்டிருக்கிறதா? அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியப் பொறுமை போன்ற ஆவியின் கனிகளால் உங்கள் வாழ்க்கை நிரம்பியிருப்பதை மக்கள் பார்க்கிறார்களா? உங்கள் சக விசுவாசிகளின் நலனில் நீங்கள் அக்கறை காட்டுகிறீர்களா? நற்செய்தி மற்றும் கிறிஸ்து இயேசுவின் பொருட்டு கஷ்டங்களை அனுபவிக்க நீங்கள் தயாரா?**

## இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

- 5ஆம் பக்கத் தொடர்ச்சி

விஷயம்: சரி! சரி நம்ம மேட்டருக்கு வருவோம். சத்தியம் இத இன்னும் கொஞ்சம் *Explain* பண்ணு.

சத்தியன்: டேய் "ஒரு தாலந்தின்" என்பது 3,000 வெள்ளிக்காசுன்னா, இது 6,000 நாட்களுக்கான ஊதியம். இது உங்களுக்கு புரியுதா. (எல்லோரும் அமைதியாக யோசித்து, புரியுதுடா) (சத்தியன் தொடர்ந்து) அதாவது வாரத்திற்கு 6 நாள், வருஷத்துக்கு 300 நாள் வேலை நாள் என்று எடுத்து கொண்டால், தோராயமாக "20 வருட சம்பளம்" என்று பொருள். டேய் சாதுரியன் உன் மொழியில சொல்லனும்னா 20 வருட *CTC*, ஒரு வருட *CTC* அதிகபட்சமா 12 லட்சம் வைத்துக் கொண்டால் 20 வருட *CTC* என்பது 2.4 கோடி. அதாவது இயேசுவானவர் 1 தாலந்து என்று சொன்னதின் மதிப்பு இரண்டரை கோடியாகும். இந்த கணக்கு தோராயமாக சாதுரியன் *CTC*இல் இரண்டு மடங்கு இருக்கும். இன்னும் 2 தாலந்து, 5 தாலந்து கணக்கு போடுவோம். (மற்ற மூவரும்: நினைக்கவே தலை சுத்துது)

சாதுரியன்: நாம் இதுவரை ஏதோ ஒரு தாலந்து செல்லாத காசு மாதிரி நம்ம *Mind*ல இருந்துச்சு. புரியும்படி சொல்லுடா

சத்தியன்: "தேவனின் சொற்பம், நம்மால் தாங்கிக் கொள்ள முடியாத அளவு பெருசு"

சாதுரியன்: டேய் நான் அதிர்ச்சியில இருந்து வெளி வரல

சத்தியன்: தெளிவா சொல்றேன் கேளு. அதாவது ஒருவனை கூப்பிட்டு 20 வருட சம்பளத்தை ஒரே நாளில் கொடுத்துவிட்டு, சில நாட்கள் கழித்து கணக்கு கேட்ட மாதிரிதான். (மற்ற மூவரும்: ஓ... புரிஞ்சுடிச்சு) அப்படின்னா 5 தாலந்துக்காரன் அதே நாளில் நூறு வருட சம்பளத்தையும், 2 தாலந்துக்காரன் அதே நாளில் 40 வருட சம்பளத்தையும் பெற்றுக் கொண்டான்.

சாதுரியன்: டேய் ரகசியம் அப்ப தாலந்து அதாவது பேச்சு தாலந்து, இசை தாலந்து, பாட்டு தாலந்து, நடன தாலந்து, குருநாடக தாலந்து அதெல்லாம்

ரகசியம்: அதுவா அதை" திறமை"ன்னு சொல்லுவாங்க. ஆங்கிலத்திலே "*Skill*". எங்க சர்ச்சில கூட வருஷத்துக்கு ஒருமுறை தாலந்து போட்டி நடத்துவோம். நான் தாலந்து போட்டிகள் என்று அறிவிப்பு கொடுக்க எழுதி வைத்து வாசிச்சிருவேன். ஏன்னா அது திறமை போட்டின்னு சொன்னா சபை மக்கள் கோவிச்சுப்பாங்க. (எல்லோரும் சிரிப்பு)

விஷயம்: எல்லா கிறிஸ்தவ *Stage*யிலும் திறமைதான் *Dominate* பண்ணுது.

ரகசியம்: சத்தமா சொல்லாத சண்டைக்கு வந்திருவாங்க.

சத்தியன்: ஒரு பொய்யை பல காலமாக சொன்னால், அது உண்மையாய் மாறிடாது.

சாதுரியன்: அப்படின்னா... அது...

ரகசியம்: நிறுத்து நிறுத்து நீ "*Gift*" வரங்களைப் போட்டு குழப்பாத. வரம்ன்னா பாட்டு வரம், இசை வரம் கிடையாது. அதைப் பிறகு பார்ப்போம். இப்போ காசை கொடுத்துட்டு கிளம்புவோம்.

சத்தியன்: மொத்தம் எவ்வளவு டா!

விஷயம்: *Rs.* 100 தான். ஆனா நம்ம பேசிய காரியம் கோடிகளைத் தாண்டிடுச்சு

(புறப்பட்டுச் செல்கின்றனர்)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# தண்ணீர் வாசல்

## Water Gate

### அறிமுகம்:

நெகேமியா புத்தகத்தில் ஒரு மிக முக்கியமான வாசல் குறிப்பிடப்பட்டுள்ளது. எருசலேமில் பல்வேறு குழுக்களால் பல வாசல்கள் பழுதுபார்க்கப்பட்டன. இருப்பினும், தண்ணீர் வாசல் பழுதுபார்க்கப்படவில்லை, ஆனால் அது எருசலேமில் இஸ்ரவேல் மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையுடன் தொடர்புடைய ஒரு முக்கிய பங்கை வகுக்கிறது.

### மக்களின் ஆவிக்குரிய வாழ்வைப் புதுப்பிக்க, தண்ணீர் வாசலின் முக்கியத்துவம்:

பண்டைய நகரங்களில் உள்ள வாசல்கள் நகருக்குள் நுழைவதற்காக மட்டுமல்லாமல், வெளியேறவும் பயன்படுத்தப்பட்டன. இந்த தண்ணீர் வாசல் பொதுக்கூட்டம் கூடும் இடமாகவும், கடவுளின் வார்த்தையைக் கேட்டு, கடவுளுடனான தங்கள் உறவைப் புதுப்பித்துக் கொள்வதற்காக மக்கள் கூடும் இடமாகவும் இருந்தது. அதாவது இஸ்ரவேல் மக்களுக்கு தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வை புதுப்பித்துக் கொள்வதற்கான ஒரு இடமாக இந்த தண்ணீர் வாசல் இருந்தது. எருசலேமில் கூடியிருந்த மக்களுக்கு இந்த இடத்திலிருந்து எஸ்றாவால் கடவுளின் கட்டளைகள் வாசிக்கப்பட்டது. இதன் மூலம் மக்கள் தங்களுடைய சிந்தனைகளையும், இருதயங்களையும் பரிசுத்தமாக்கி கொள்ள முடிந்தது. இஸ்ரவேல் மக்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவும், கடவுளுடனான தங்கள் உறவை வளர்த்துக்கொள்ளக் கூடிய ஒரு இடமாகவும் இந்த தண்ணீர் வாசல் இருந்தது.

### தண்ணீர் வாசலின் – முக்கியத்துவம்:

கிபியோன் நீரோடைக்கு அருகில் தண்ணீர் வாசல் அமைந்திருந்தது. இது சாலமோன் ஆலயத்தின் பகுதியை நோக்கி தண்ணீர் திறக்கப்பட்டது. ஆகவே தண்ணீர் வாசல் தணணீருக்கான ஒரு முக்கிய இடமாக உள்ளது. மனிதர்கள் உயிர்வாழ தண்ணீர் மிகவும் இன்றியமையாதது.

### தண்ணீர் வாசலின் – அடையாளம்:

கடவுளின் வார்த்தையைக் கேட்டு அவரோடு இணைந்து, தங்களுடைய வாழ்க்கையைப் புதுப்பித்துக்கொள்ளும் இடமாகவும், கடவுளுடனான உடைந்த உடன்படிக்கையின் உறவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஒரு இடமாகவும் இது உள்ளது. தண்ணீர் என்பது கடவுளுடைய வார்த்தையின் அடையாள அர்த்தமாக இருக்கிறது. ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், கடவுளை மக்கள் தொழுவதற்கும் பொறுப்பானவர் எஸ்றா ஆவார். நெகேமியா, எஸ்றாவை முன்வைத்தே சுவர்களை மீண்டும் கட்டியெழுப்பும் தனது அனைத்து பணிகளையும் மேற்கொண்டார்.

### தண்ணீர் வாசலின் – நற்செய்தி பணியின் முக்கியத்துவம்:

கடவுள் மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்க இரண்டு இரண்டு பேராக (ஆண்கள்) அனுப்பினார். பவுல் மற்றும் தீமோத்தேயு, பவுல் மற்றும் சீலா, பேதுரு மற்றும் யோவான், பர்னபா மற்றும் யோவான் மாற்கு. இரண்டு இரண்டு பேராக ஊழியங்களில் ஈடுபட்டதற்கான முக்கிய சான்று வேதாகமம் ஆகும்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவானது பணித்தளங்களில் சக ஊழியருடன் பணியாற்ற உங்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகிறது. இதற்கு ஜெபக்குழு உறுப்பினர்களும், கலாச்சார மிஷனெரிகளும் மிஷனெரி பணியின் மற்ற சான்றுகளாவர். இதில் நற்செய்தியை அறிவிக்கும் எஸ்றாவும், அதைக் கேட்கும் இஸ்ரவேல் மக்களும் ஒரு சிறந்த உதாரணமாகவுள்ளனர்.

### நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் தேவை:

கலாச்சாரம் கடந்து சென்று நற்செய்தி அறிவிக்கும் பணி மிகவும் இன்றியமையாதது. கடவுளுடைய வார்த்தை அறிவைச் சார்ந்தது அல்ல, ஆவிக்குரிய வாழ்வைச் சார்ந்தது. FMPB இயக்கத்திற்கு தகுதிவாய்ந்த வேதாகம ஆசிரியர்களும், இறையியல் மற்றும் மிஸ்ஸியாலஜி மாணவர்கள் (theological/missiological) அநேகர் தேவைப்படுகின்றனர். “படிப்பறிவு இல்லாத மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கலாச்சார மிஷனெரிகளும், ஆசிரியர்களும், வெவ்வேறு மொழி பேசும் மக்களுக்கு, அவர்களுடைய மொழியில் வேதாகமத்தை மொழி பெயர்க்க Bible-Translatorsயும் தேவைப்படுகின்றனர்”.

நீங்கள் நம் நாட்டின் மக்களுக்கு கடவுளின் நற்செய்தியை கூறும் தண்ணீர் வாசலாக இருப்பீர்களா? பல்வேறு மக்களினங்களுக்கு கடவுளின் நற்செய்தியை நீங்கள் அறிவிக்க FMPB உங்களுக்கு ஒரு ஊன்றுகோலாக உள்ளது. இதில் உங்களுடைய பங்கு என்ன? நீங்கள் எங்களுடன் சேர்ந்து நற்செய்தியை அறிவிக்கும் பணியைச் செய்ய ஆயத்தமா?



**நீங்கள் தான் எஸ்றா!!!** **நீங்கள் தான் நெகேமியா!!** **சிந்திப்பீர்!**

அப்போ! இப்போ!! எப்போ!!!

Rev. Prabakara Sarathy

# நம் கூடாரங்களுக்கான ஏழு ஜெபக்குறிப்புகள்

**1. நம் கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் தொனிக்க வேண்டும்.**

நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும் (சங்கீதம் 118:15).

**2. நம் கூடாரங்கள் தேவ சாயல் நிறைந்ததாக இருக்கவேண்டும்.**

யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்! (எண்ணாகமம் 24:5)

**3. நம் கூடாரங்களில் தேவ சமாதானம் இருக்கவேண்டும்.**

உம்முடைய கூடாரம் சமாதானத்தோடிருக்கக் காண்பீர்; உம்முடைய வாசஸ்தலத்தை விசாரிக்கும்போது குறைவைக் காணமாட்டீர் (யோபு 5:24).

**4. நம் கூடாரங்களில் கடவுளின் வழிநடத்தல் இருக்கவேண்டும்.**

தேவனுடைய இரகசியச்செயல் என் கூடாரத்தின்மேல் இருந்தது (யோபு 29:4).

**5. நம் கூடாரங்களில் சுகம் இருக்கவேண்டும்.**

ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது (சங்கீதம் 91:10).

**6. நம் கூடாரங்கள் தேவகிருபையால் செழிக்க வேண்டும்.**

துன்மார்க்கனுடைய வீடு அழியும்; செம்மையானவனுடைய கூடாரமோ செழிக்கும் (நீதிமொழிகள் 14:11).

**7. நம் கூடாரங்களில் பண்டிகையின் மகிழ்ச்சி இருக்கவேண்டும்.**

உன்னை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துவந்தது முதற்கொண்டு உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான், பண்டிகை நாட்களில் செய்யப்படுகிறதுபோல், திரும்பவும் உன்னைக் கூடாரங்களில் தாபரிக்கப்பண்ணுவேன் (ஓசியா 12:9).